Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-srnskr @ evreka.lk
(சி.1136)

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவளளுவர் ஆண்டு: 2034 ஆடி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 16 (15.08.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 316

## வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக யோசனை குறித்து

# புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் 21 ஆம் திகதி முதல் பாரிஸில் ஆராய்வர்!

## பிரான்ஸ் அறிவித்திருப்பதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தகவல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது தொடர்பான தமது யோசனையைத் தயாரிப்பதற்காக, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை பாரிஸில் கூடி ஆராயவுள்ளதாகவும் -

இதற்கான சகல ஏற்பாடுகளையும் பூர்த்திசெய்திருப்பதாக பிரான்ஸ் அரசாங்கம் தமக்கு அறிவித்திருப்பதாக, நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இத்தகவலை வெளியிட்டார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இடைக்கால நிர்வாக யோசனை தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகள் உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்களுடன் ஆராய்ந்து, தமது இறுதி யோசனைகளை நோர்வேயிடம் மூன்று வாரகாலத்தில் கையளிப்பர்.

எழுத்து மூலமான இந்த யோசனைகளை, நோர்வே - இலங்கை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கும். பாரிஸில் புலிகள் கலந்துரையாடல் நடத்துவதற்குரிய அனைத்து ஒழுங்குகளையும் செய்யுமாறு வேண்டியும், இலங்கை தூதரகம் உத்தியோகபூர்வமாக பிரான்ஸ் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் யோசனைகள் கிடைத்த பின்னர், அது ஆராயப்பட்டு செம்ரெம்பர் மாத (10 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் போரை ஆரம்பிக்க சந்திரிகா இரகசியத் திட்டம்!

## அவருக்கு நெருக்கமான வட்டாரங்களே தெரிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் - சமாதான முயற்சிக்குப் போதிய ஒத்துழைப்பை வழங்கினாலும், தனது சகல அதிகாரங்களையும் பயன்படுத்தி, நாடாளுமன்றத்தைக் கலைத்து, இடைக்கால ஆட்சியின் கீழ் நாட்டை வைத்துக்கொண்டு - மீண்டும் ஒரு போரை வலிந்து ஆரம்பிப்பதற்கான திட்டங்களை ஜனாதிபதி சந்திரிகா தீட்டி வருவதாக, அவருக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி, இணையத்தளம் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.**



முப்படைத் தளபதிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

முப்படைகளின் ஆயுத பலத்தையும் ஆட்பலத்தையும் மிக வேகமாக விருத்தி செய்வதுடன், முப்படைத் தளபதிகளையும் அடிக்கடி சந்தித்து, அவர்களோடு உரையாடி, அவர்களைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா, நிதி ஒதுக்கீட்டிலும் பாதுகாப்பு செலவீனத்தைக் குறைக்க வேண்டாமென்று உத்தரவிட்டிருந்தார்.

இதனடிப்படையில், கடந்தகாலத்தில் இலங்கையின் போருக்கு ஆயுத மற்றும் நிதியுதவி வழங்கிய இஸ்ரேல், உக்ரேன், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் பாதுகாப்பு அமைச்சுக்களோடும் அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்தி வருகிறார் ஜனாதிபதி சந்திரிகா.

நாடாளுமன்றத்தைக் கலைத்து, ஜனாதிபதி ஆட்சியை இடைக்கால ஆட்சியாக அறிமுகம் செய்வதோடு, போரை மீண்டும் வலிந்து ஆரம்பிக்க, விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் திட்டங்களையும் அவர் தீட்டிவருவதாக விடயமறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி, அந்த இணையத்தளம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



அம்மாவுக்கு பட்டது காணாது போல கிடக்கு...!

# மட்டக்களப்பில் ஈ.பி.டி.பியின் உறுப்பினர் இனந்தெரியாதோரின் சூட்டுக்குப் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தனியார் பஸ்நிலையத்திற்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் வைத்து - ஈ.பி.டி.பி. உறுப்பினரான அரசரத்தினம் ரதீஸ்கர் என்பவர் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே, இனந்தெரியாத பிஸ்ரல் குழுவினரால் - இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு வன்ரிஸ் ஒழுங்கையில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் இருந்து, மோட்டார் சைக்கிளில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# வைகோவை விடுவிக்க 300 எம்.பிக்கள் மகஜர்!

'பொடா' தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ உட்பட அக் கட்சியைச் சேர்ந்த 9 பேரையும் உடனடியாக விடுவிக்குமாறு கோரி, 300 எம்.பிக்கள் கையெழுத்திட்ட மனுவொன்று 'பொடா' ஆய்வுக் குழுவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை சட்டவிரோதமானது என்று அறிவிக்க வேண்டுமென அந்த மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், வைகோவின் பேச்சு, 'பொடா' சட்டத்தின் 21 ஆவது பிரிவின்கீழ் வராது என்று தெரிவிக்கப்பட்டிருப்பதையும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# விசேட தூதுவர் சொல்ஹெய்ம் தளபதி ரமேஸுடன் சந்திப்பு!

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மட்டக்ளப்புக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்ததுடன், விடுதலைப் புலிகளின் தளபதி ரமேஷ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள், மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து, அங்குள்ள நிலைமைகள் தொடர்பாகக் கேட்டறிந்தார்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில், நோர்வேத் துதுவர் எரிக் சொல்ஹெய்முக்கும், மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு மட்டக்களப்பு மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில், அரச சார்பற்ற இணையத் தலைவர் ப. கமலதாஸ் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள், உள்ளூர் அமைப்பின் பிரதிநிதிகள் (10 ஆம் பக்கம் பார்க்க)



நோர்வே விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மை தளபதி ரமேஷ் கைலாகு கொடுத்து வரவேற்பதையும், 'தேனகம்' விடுதியில் பேச்சுக்கள் நடைபெறுவதையும் படங்களில் காணலாம்.

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# அரசாங்க அதிகாரிகள் பலர் மனித உரிமை மீறல்களில்!

இந்த வருடம் ஆரம்பம் முதல் அரச அதிகாரிகள் பலர் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அரச அதிகாரிகள் 23 பேர், உயர் நீதிமன்றம் விடுத்த உத்தரவின் பேரில் 6 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்தியுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள் சட்ட விரோதமான முறையில் செய்த கைதுகள், தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை தொடர்பாகவே இவ்வாறு அபராதம் செலுத்தியுள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலில் இராணுவக் கட்டுப்பாட்டற்ற பிரதேசத்து மக்களை வாக்களிப்பு செய்யவிடாத குற்றத்திற்காக - தேர்தல் ஆணையாளர், இராணுவத் தளபதி ஆகியோர் உயர் நீதிமன்றில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வலைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் சங்கங்களுக்கிடையிலான போட்டி!

அகில இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படவுள்ள அகில இலங்கை வலைப்பந்தாட்ட சங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி குருநாகலில் நடைபெறவுள்ளது.

நர்ளையும், நாளைமறுதினமும் குருநாகல் - மல்லிகாதேவி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. யாழ்.மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்டச் சங்கத்தின் சார்பில்- ஆர்.நீரஜா,எஸ்.அஜந்தா,எஸ்.சுகுணா,பி.பிரபா,எஸ்.மதிவதனா, ஜே. ரெமின்றா,ரி.வாசுகி,பி.நிலாந்தி, ரி.கௌரி, கே.உதயந்தி, எஸ்.வஸ்தினி, ரி.சுகிர்தா, ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பன்னிரெண்டு பேர் அடங்கிய இந்த வலைபந்தாட்ட அணியினர் இன்றையதினம் குருநாகலுக்குப் புறப்படுகின்றனர்.

## டிப்பர் வாகனம் மோதியதில் ஆறு சைக்கிள்கள் சேதம்!

மரண வீட்டில் நின்ற சைக்கிள்ளின் மீது, டிப்பர் வாகனம் ஒன்று மோதியதில் ஒருவர் படுகாயமடைந்ததுடன், ஆறு சைக்கிள்கள் முற்றாகச் சேதமடைந்தன.

மூளாய் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், எஸ்.ரவீந்திரன் (வயது 30) என்பவரே படுகாயமடைந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சம்பந்தப்பட்ட வாகனத்தின் சாரதி மதுபோதையில் இருந்ததாகவும், அதனாலேயே - இந்த விபத்து இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சேதமடைந்த சைக்கிள் உரிமையாளர்களுக்கு, சம்பந்தப்பட்ட வாகன சாரதி, நட்டஈடு வழங்கியதையடுத்து- இந்தப் பிரச்சினை சமரசமாக தீர்க்கப்பட்டது.

## கலந்துரையாடல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடலொன்று, எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலநாயகம் போல், தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள கலாசார விளையாட்டு விழா பற்றி ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இந்தக் கலந்துரையாடலுக்கு, சகல கலாசார உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## நல்லூரில் தெய்வீகப் பேருரை!

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் - யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நடத்தும், ஆன்மீகத் தொடரின் 49 ஆவது நிகழ்வுகள், இன்று மாலை 5.30 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'இந்து மதம் காட்டும் இறைவழிபாடு' என்ற தலைப்பில் தமிழ்வேந்தன் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார்.

## நாதஸ்வரக் கலைக்கு மணிமகுடம் சூட்டியவன்!

நாம் செய்த தவப்பயனாய்
அளவையிலே வந்துதித்தாய்!
நாதஸ்வரக் கலைவளர்க்க
அளவையிலே வந்துதித்தாய்!!
பத்மநாதன் என்னுமுயர்
திருநாமம் புண்டிருந்தாய்!
சித்தத்தை நாதஸ்வரக்
கலைவளர்க்க அர்ப்பணித்தாய்!!

கைவிரல்கள் நுனியினிலே
ராகமெல்லாம் சரணமிடும்!
கைவிரல்கள் அசைவினிலே
ராகமெல்லாம் கரணமிடும்!!

ராக ஆலாபனையிலுன்
கற்பனையின் பெருக்கமையா!
ராக ஆலாபனையிலெம்
உள்ளமெல்லாம் உருகுதையா!!

நாதஸ் வரத்தினையுன்
கைகளிலே எடுத்திருப்பாய்!
நாதஸ் வர இசையில்
எம்மைநீ நனைத்திருப்பாய்!!

உன்னிசையைக் கேட்கின்ற
தலையெல்லாம் ஆடுமையா!
உன்னிசைக்குக் கைகளெல்லாம்
தாளம் போடுமையா!!

உயர்தரமும் தனித்துவமும்
உன்னிசையின் இலக்கணமாம்!
உனைச்சுற்றி வரும் கூட்டம்
உன்னிசையின் இலட்சணமாம்!!

நல்லூரின் வீதியெல்லாம்
இசைவெள்ளம் பெருகுமையா!
கல்லான மனம் கூட
உன்னிசைக்கு உருகுமையா!!

முருகு


துரிதமாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்கிலுமுள்ள உங்கள் உறவினர்களுடன் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டு தொடர்புகளுக்கு நாடவும்

சிறி முருகன் தொலைத் தொடர்பு நிலையம்

மற்றும்

முகவர் தபால் நிலையம்

303, கே.கே.எஸ்.வீதி,

யாழ்ப்பாணம்.

T.P - 021-222 2670 Fax - 021 222 3214

e-mail - jel - smskr @ eureke.lk

(சி-1312)



உங்களுக்குத் தேவையான நவீன விதமான சன் கிளாஸ், டே அன் நயிட் கிளாஸ், பிளாஸ்டிக் லென்ஸ் போன்ற சகலவிதமான கண்ணாடிகள் 1 மணித்தியாலத்தில் குறைந்த விலையில் செய்துதரப்படும். இலவச கண் பரிசோதனை.

பாடசாலை மாணவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

ஒளிச்சுடர் மூக்குக் கண்ணாடியகம்

44A, நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.



ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல் இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினவெளியீடு

விஜயகாந், கிரண் நடித்த

தென்னவன்



காட்சிநேரம்

10.30, 2.30, 6.30, 9.30

(சி-1284)



திரைச்சோலை சங்கானை

அஜித், சிம்ரன் நடித்த

வாலி

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

BULE STREAK

இரவுக் காட்சி 8.45 (பு.நே)



மலிவு விலையில் புத்தகங்கள்

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு

ஆகஸ்ட் 03 முதல் 30 வரை

புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(நல்லூர் சிவாலயம் முன்பாக)

சகல புத்தகங்களுக்கும் 10 % கழிவு

சிறுவர் கதைகள், பாடல்கள், சிறுகதை, நாவல்கள், ரமணி சந்திரனின் சகல கதைகளும், இந்து சமய நூல்கள், தமிழ் இலக்கிய நூல்கள், கம்யூட்டர் நூல்கள், ஆங்கிலம், தமிழ் சிங்கள அகராதிகள், பாடசாலைப் புத்தகங்களுக்குரிய செயல் நூல்கள் பயிற்சிகள் வினா-விடைகள் இன்னும் பல.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை

234,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி 021-2222573

(சி-1339)





தில்லையம்பதி கொட்டேஜ்

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இல.236,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P.021-2222488, 021-2223820

(சி-1316)



மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இம்மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும், ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள "புத்தகக் கடல்" 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணினிப் புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ளப் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூபா 100 வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர பாடசாலை அலுவலக உபகரணங்களும், பாடசாலை அழிபொருட்கள், மூலப்பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். பணத்திற்கு பதிலாக வங்கிக்கடன் அட்டைகளும் பெற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்ய தொடர்பு கொள்ள வேண்டிய முகவர்:-

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

இல.212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1306)

### வெளிநாட்டு உதவிகளை பொறுப்பேற்பதாக

# அமைச்சர் மிலிந்த மொறகொட மீது குற்றஞ்சாட்டுகிறார் ரவி கருணாநாயக்க



மிலிந்த மொறகொட

(கொழும்பு)

வெளிநாட்டில் இருந்து நேரடியாக அரசிற்கு வரும் உதவிகள் எனவும், மலிந்த மொறகொடவிற்கு ஊடாக வரும் உதவிகள் எனவும் இருவகைகளில் வருகின்றன என, ரவி கருணாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்தவத்த தன்போக்கில் வேலை செய்கிறார். அவரின் இது போன்ற செயற்பாடுகள் அரசிற்குப் பாரிய விளைவை உண்டுபண்ணக் கூடியது என, அமைச்சரவைக்கு முன்னதான கூட்டத்தில் அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்தார்.

இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். மிலிந்த மொறகொட வெளிநாட்டு உதவிகளைத் தானே பொறுப்பேற்கும் நடவடிக்கையை மாற்றியமைக்க வேண்டும்.



ரவி கருணாநாயக்க

லால் ரத்நாயக்க மக்கள் வங்கியை அரசு தனியார் மயப்படுத்தப் போவதாக பிரசாரம் செய்துவருகின்றார். இவ்வாறான பிரசாரங்கள் நன்மையைத் தந்துவிடப்போவதில்லை எனவும் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# நிலுவைப்பணத்தை செலுத்தாவிட்டால் விமானங்கள் தரையிறக்குவதற்கு தடை!

### விமான சேவை நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தால் வழங்கப்பட வேண்டிய 270 மில்லியன் ரூபா நிலுவையை, விரைவில் வழங்காவிட்டால் - கட்டுநாயக்க விமானநிலையத்தில் விமானங்களைத் தரையிறக்குவதற்குத் தடைவிதிக்கப்போவதாக, விமானநிலைய மற்றும் விமான சேவை நிறுவனம் எச்சரித்துள்ளது.

விமானங்களைத் தரையிறக்கும் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொடர்பாக, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்திற்கு - மூன்றாவதும், இறுதியுமானதுமான கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக, விமானநிலைய விமான சேவை நிறுவனத் தலைவர் ஹேமசிறி பெர்னாந்து தெரிவித்துள்ளார்.

எயார் லைன்ஸ் நிறுவனத்தால் தரையிறக்கல் கட்டணமாக 370 மில்லியன் ரூபா செலுத்த வேண்டி இருந்ததாகவும், இது குறித்து - அந்த நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, 100 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டபோதிலும், மீதிப்பணம் செலுத்தப்படவில்லை.

தற்போது அனுப்பப்பட்டுள்ள மூன்றாவது கடிதம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் - விமானங்களைத் தரையிறக்குவதற்குத் தடைவிதிக்க நேரிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### கூட்டுறவு தின விழா!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் 81 ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினவிழா, நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பே.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இநத நிகழ்வல் - தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

# நேற்றுமுன்தினம் சந்திரிகாவுடன் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சந்திப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி தலைமையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அமைச்சுகள், அரச திணைக்களங்கள் ஆகியவற்றிற்கிடையே கண்காணிப்புக் குழுவினை அமைத்தல், கண்காணிப்புக் குழுவின் தலைவராக எதிர்க்கட்சி உறுப்பினர் விளங்குதல் தொடர்பான விடயங்கள் இந்தக் கலந்துரையாடலின்போது ஆலோசிக்கப்பட்டது.

### திருகோணமலையில்

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்!

(திருகோணமலை)

திருகோணமலை - உப்புவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள செல்வராஜபுரம் பிள்ளையார் கோவிலடியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த துப்பாக்கிசூட்டுச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர்.

இரவு எட்டு மணியளவில் நடந்த இந்த சம்பவத்தின்போது, ஒருவர் உடனடியாகப் பலியாகினார். மற்றவர், காயமடைந்து திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு மரணமடைந்தார்.

இருவருடைய உடல்களும் மூதூருக்குக் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மரணமடைந்த இருவரும் மூதூரிலுள்ள கெசட்டி குறூப்புடன் தொடர்புடையவர்களாய் இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, மூதூர்ப் பிரதேசத்தில் பதற்றநிலை தோன்றியுள்ளது.

பதற்றத்தைத் தணிக்கும் நோக்கில் அமைச்சர் ஹக்கீம் மூதூருக்குச் சென்றுள்ளார்.

### பல்கலைக்கழகங்களின்

# கல்வி சாரா ஊழியர் போராட்டம் அரசியல் பின்னணியைக் கொண்டதல்ல!

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் போராட்டம் எதுவித அரசியல் பின்னணிகளும் அற்றது என, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் - பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் முற்றிலும் அரசியல் பின்னணி வாய்ந்தது என, மூன்றாம்நிலைக் கல்வி அமைச்சர் காசீம் தெரிவித்த கருத்தை மறுத்தே, இந்தச் செய்திக் குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரவிக்கப்பட்டுள்ளதாவது, பல்கலைக்கழக கல்வீசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பான முறைப்பாடுகளை, கடந்த சில ஆண்டுகளாக உரிய வகையில் பரிசீலனை செய்யத் தவறிய அரசாங்கத்தின் போக்கே, இன்றைய நிலைக்கு வித்திட்டது.

இப்போராட்டத்திற்கு அரசியல் சாயம் பூசுவதன்மூலம், அரசு நிலைமையை மிகவும் மோசமாக்குகிறது. உண்மையிலேயே, அரசாங்கமே - பல்கலைக்கழக நிர்வாகங்களில் அரசியல் தலையீடுகளை மேற்கொண்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் தெரிவு, துணைவேந்தர் தெரிவு, ஊழியர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் அமைச்சர் ஒருவரின் தலையீடு இருந்தமையே, இதற்கான உதாரணமாகக் கூறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் கல்விசாரா ஊழியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே. இதில் இலங்கைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கம் பங்குகொள்ளாதபோதும், யாழ். பல்கலைக்கழகத்தில் தொழில்புரியும் சகல தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் இந்த வேலைநிறுத்தத்தில் பங்குகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வேலைநிறுத்தம் தொடர்பாக அவசர கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறஇருப்பதாக, சகல அங்கத்தவர்களையும் இன்று காலை 9.00 மணிக்கு இராமநாதன் மண்டப முன்றலில் ஒன்றுகூடுமாறு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராசா கேட்டுள்ளார்.

# 34 சமுர்த்தி வங்கிகள் யாழில் அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

வறுமைக்கோட்டின் கீழ் இருப்பவர்களின் தரத்தை உயர்த்தும் நல்லெண்ண அடிப்படையில் - யாழ். மாவட்டத்தில் மேலும் 34 சமுர்த்தி வங்கிகளை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 24 வங்கிகள் திறக்கப்பட்டுள்ளன். இங்கு 1,27,232 குடும்பங்கள் சமுர்த்தி உதவி பெறுகின்றனர். இந்தக் குடும்பத்தினர் சமுர்த்தி வங்கிகளில் 2 கோடி 84 இலட்சம் ரூபாவை தன்னிச்சையாகச் சேமித்து வைத்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள - அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களிலும் 104 சமுர்த்தி வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. கைத்தொழில் கிராம அபிவிருத்தி சந்தை வாய்ப்பு விவசாய மனித வள அபிவிருத்தி ஆகிய சமுர்த்தித் திட்டத்தின் கீழ் 7 கோடியே 43 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

வட - கிழக்கு மாகாணத்தில் - சமுர்த்தித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு 2 ஆயிரத்து 330 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகததர்களும், 146 சமுர்த்தி முகாமையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்வதற்கு, பல விழிப்புணர்வுத் திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம், வருமானம் குறைந்த நிலையிலுள்ள பல குடும்பங்கள், தமது வருமானத்தை அதிகமாகப்பெற்று, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தமுடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# உலகெங்கும் கணினிகளைத் தாக்கி செயலிழக்கச் செய்யும் புதிய வைரஸ்

(கொழும்பு)

**W32. Blaster** என்ற கணினி வைரஸ் - உலகெங்குமுள்ள ஏராளமான கணினிகளைத் தாக்கி, அவற்றைச் செயலிழக்கச் செய்வதுடன், சில தற்காலிக செயலிகளைக் கணினியில் பதிவு செய்துவிடுவதால், எதிர்காலப் பாதிப்புக்களை உருவாக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தியும் வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் அல்லது அலுவலகத்தில் பாவிக்கும் கணினி, சில நிமிடங்களுக்கொரு தடவை தானாகவே அணைவதை அவதானித்தால் அல்லது சில மென்பொருட்களை உபயோகிப்பதில் புதிய சிரமங்களை அவதானித்தால், உடனடியாக மைக்ரோசொவ்ற் அறிமுகம் செய்துள்ள செயலிழக்கியை (**patch file**) உபயோகித்து, அவர்கள் கூறும் சில படிகளை நடைமுறைப்படுத்தி, இந்தக் குழப்பங்களை சரி செய்ய லாம் என்று கூறப்படுகிறது.

குறிப்பாக எக்ஸ்.பி. மற்றும் வின்டோஸ் 2000 மென்தளங்களைப் பாவிக்கும் கணினிகளின் **DCOM RPC Vulnerability** ஐத் தாக்கிவருகின்ற இந்த வைரஸ், கணினியில் **Msblast. exe** என்ற ஒரு புதிய இயக்கியை நிரந்தமாகப் பதிவு செய்துவிடுவதால், ஒவ்வொருமுறை கணினியின் தொடுக்கியை அழுத்தும் போதும், இந்த இயக்கியும் இயல்பாக இயங்க ஆரம்பிக்கும் என்பதால், கணினியின் கொன்ரோல் பனலிற்கு சென்று, அங்கே, அட் ரிமூவ் புறொகிராம்சில் **Msblast. exe** என்னும் இயக்கி காணப்பட்டால், அதை முற்றாக அழிக்கவேண்டியது அவசியம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கணினியின் தரவுத்தட்டில் தானாகவே **Msblast. exe** என்ற இயக்கியை தரவிறக்கம் செய்து விடுவதனால், இதை நிரந்தரமாகக் கணினியிலிருந்து நீக்காதவிடத்து, இது எதிர்காலத்தில் கணினியை செயலிழக்கவோ அல்லது தரவுகளை அழித்துவிடவோ வாய்ப்புக்களை உருவாக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இதனது விபரங்களையும், சரி செய்வதற்கான படிமுறைகளையும், செயலிழக்கிகளையும் **http://www.microsoft.com/technet/default.asp** என்னும் தளத்தில் நீங்கள் நேரடியாக அறிந்துகொள்ளலாம்.

### சுகாதார வைத்திய பணிமனையில் குளிர்சாதன வசதி இல்லை

ஒட்டிசுட்டான் அரச கால்நடை உற்பத்தி சுகாதார வைத்திய பணிமனையில் - குளிர்சாதன வசதிகள் இல்லாததினால் சிறந்தமுறையில் சேவையினை வழங்கமுடியாத நிலையில் உள்ளதாக, ஒட்டிசுட்டான் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

திணைக்களங்களிற்கும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களிற்கும் இதுபற்றி எடுத்துக் கூறியுள்ளபோதிலும், இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

### நல்லை ஆதீனத்தில் பீடாரோகண விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 37 ஆவது பீடாரோகண விழா எதிர்வரும் 20 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 10 மணிமுதல் அபிஷேகம், பூஜை பீட அபிஷேகம், கொலு பூஜை, பட்டணப் பிரவேசம் என்பன இடம்பெறவுள்ளது.

# பண்ணையில் 62 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் புதிய சிறைச்சாலை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பண்ணைப் பகுதியில் 62 மில்லியன் ரூபா செலவில், நவீன வசதிகளுடன் கூடிய புதிய சிறைச்சாலையொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

புதிய சிறைச்சாலை அமைக்கப் படவுள்ள காணியை உள்துறை அமைச்சர், சிறைச்சாலை ஆணையாளர் உட்பட்ட குழுவொன்று கடந்த வாரம் நேரில் சென்று பார்வையிட்டது.

இதுதவிர, திறந்த வெளிச் சிறைச்சாலையொன்றையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், இதற்காக ஒதுக்கப்பட்ட காணி பொருத்தமாக இல்லை எனவும், அதற்காகப் புதிய காணியொன்று தேடப்பட்டு வருவதாகவும், சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

இரு வாடகை வீடுகளில் இயங்கி வரும் யாழ். சிறைச்சாலை, போதிய வசதிகளின்றிக் காணப்படுவதாகவும், தற்போது அங்கு 205 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 45 பேரே குற்றவாளிகள் எனவும், ஏனையோர் சந்தேகத்தின் பேரில் கைதானவர்கள் எனவும் அறிவிக்கப்படுகிறது.

புதிய சிறைச்சாலை அமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதெனவும், இது குறித்து ஆராயவதற்காகச் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## நயினாமடு திலீபன் மருத்துவமனையில்
# பாம்புக்கடிக்கு சிகிச்சை பெறும் நோயாளர் தொகை அதிகரிப்பு!

நயினாமடு தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில், பாம்புக்கடிக்கே அதிகமானவர்கள் சிகிச்சை பெற்று வருவதாக, மேற்படி மருத்துவமனை மருத்துவர் தெரிவித்தார்.

ஓயாத அலைகள் 3 நடவடிக்கை மூலம், மீட்கப்பட்ட வவுனியா மாவட்டத்தின் நயினாமடு பகுதியில் அமைந்துள்ள இந்த மருத்துவமனை மூலம் - அனந்த புளியங்குளம், மதியாமடு, பரந்தன், அகிலடி, கரப்புக்குத்தி, சின்ன பூவரசங்குளம், விஞ்ஞானகுளம், தச்சடம்பன், சேமமடு, நயினாமடு போன்ற பகுதிகளிலுள்ளோர் பெருமளவு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாம்பு மற்றும் விஷஜந்துகளால் கடியுண்டு, சிகிச்சை பெறுபவர்களே அதிகமானவர்கள் எனவும், இப்பகுதியில் நாகபாம்பு, புடையன், சுருட்டை ஆகிய விஷப் பாம்புகளே அதிகமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பெய்த மழையின் காரணமாக - மலேரியா நோய் அதிகரித்திருப்பதாகவும், மாதந்தோறும் 1000 பேர் சிகிச்சை பெற்றுவருவதாகவும், இந்த மருத்துவமனை அமைந்துள்ள இடத்திலிருந்து பல மைல்களுக்கு அப்பாலேயே பிற மருத்துவமனைகள் அமைந்திருக்கின்றன. திலீபன் மருத்துவமனை- இப்பகுதியில் அமைக்கப்பட்டிருப்பதால், மக்கள் பெரும் பயனை அடைந்து வருவதுடன், உயிர் இழப்புக்களையும் தடுக்கமுடிகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### போக்குவரத்துக்கள் சிரமம்

மாங்குளத்திற்கும் - ஒலுமடுவிற்கும் இடையிலுள்ள பாலம் - போக்குவரத்துக்குப் பாதுகாப்பு இல்லாமையினால், சாரதிகள் - வாகனங்களைச் செலுத்துவதில் மிகவும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பாலம் ஆபத்தானது என்றோ அல்லது ஒடுங்கியபாலம் என்றோ, எந்தவித அறிவித்தலும், அடையாளங்களும் இல்லை. மாங்குளம் - முல்லைத்தீவு வீதி புனரமைக்கப்பட்டு வருவதால், சாரதிகள் வாகனங்களை மிகவேகமாகச் செலுத்தி வருகின்றனர்.

இதனால், கடந்த வியாழக்கிழமை - வேகமாக வந்த மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த பிக்கப் ஒன்று, இப்பாலத்தினூடாக வீழ்ந்து, சேதத்துக்குள்ளாகியது குறிப்பிடத்தக்கது. (17)

## கிளிநொச்சி வைத்தியசாலைகளில்
# தொண்டராக பணிபுரிவோருக்கு நியமனம் வழங்கக் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் தொண்டர்களுக்கு - நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதிமாகாணப் பணிப்பாளரிடம் - கிளிநொச்சி மாவட்ட கியுடெக் நிறுவன இணைப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி வேண்டுகோள் குறித்து, கிளிநொச்சி மாவட்டப் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில் -

வைத்தியசாலையில் தொண்டர்களாகப பணிபுரிவோரின் கல்வித் தகைமை அடிப்படையில் பிரச்சினை தோன்றியுள்ளதால், அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனவும், அவர்களின் தகைமை அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுக்க மாற்றுவழி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# சாவகச்சேரி மீன் சந்தை மீளப் புனரமைக்கப்படுகிறது

(மட்டுவில்)

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால், மிகவும் சேதமடைந்து, அழிவுற்றிருந்த சாவகச்சேரி நகர மீன்சந்தை - தற்போது சாவகச்சேரி நகரசபையினால், மீளப்புனரமைக்கப்பட்டு வருகின்றது.

சுமார் பதினொரு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படும் மீன் சந்தைக்கருகிலுள்ள கிணறு ஒன்று - அறுபதினாயிரம் ரூபா செலவிலும், மலசலகூடத் தொகுதியொன்று சுமார் ஒன்பதரை இலட்சம் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாகச் சாவகச்சேரி நகரசபை வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதேவேளை, யுத்தகாலத்தில் அழிவுற்ற கடைத்தொகுதிகளுக்குப் பதிலாகச் சாவகச்சேரி சந்தையினுள் தற்காலிகக் கடைத்தொகுதி ஒன்றும் அமைக்கப்பட்டு, வேலைகள் முடிவடையும் தறுவாயிலுள்ளது. (24)

# படங்களும் செய்திகளும்



மக்கள் வங்கி உதவி முகாமையாளர் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட பதில் துணைவேந்தர் பேராசிரியர் சிற்றம்பலம், முகாமைத்துவ பீடாதிபதி நடராஜசுந்தரம், வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா, முகாமைத்துவத் தலைவர் திருமதி தே.சிவாஸ்கரன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.



கரியாலை நாகபடுவான் பல்லவன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா அண்மையில் நடைபெற்றபோது, முன்பள்ளி சிறார்கள் இசையுடனான உடற்பயிற்சி செய்வதைப் படத்தில் காணலாம்.

### பூநகரி பிரதேசத்தில் கால்நடை வைத்திய சேவை

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் விசேட கால்நடை வைத்திய சேவை நடைபெற்று வருகிறது.

பூநகரி - கால்நடை வைத்தியப் பிரிவினரும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து, இச்சேவையை மேற்கொண்டு வருகின்றனர்.

பூநகரிப் பகுதிகளில் 1485 மாடுகளுக்கு - தொண்டையடைப்பான் தடுப்பு மருந்தும், 1400 கோழிகளுக்கும், 112 நாய்களுக்கும் தடுப்பூசியும், செயற்கைமுறைச் சினைப்படுததலும், பண்ணையாளர்களுக்கான கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன.

பூநகரிப் பிரதேசத்தில் - சாமிபுலம், நல்லூர், ஆலயங்கேணி, முட்கொம்பர் தியாகம், ஞானிமடம், கறுக்காய்த்தீவு ஆகிய கிராமங்களில் இச்சேவை மேற்கொளளப்பட்டுள்ளது.

(17)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் நில அளவையாளர் இல்லை

## அரச அதிபர் அறிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்திற்குரிய நிலஅளவையாளர் ஒருவரும் நியமிக்கப்படாமையால், காணிகள் சம்பந்தமாகவோ அல்லது பிரதேச எல்லைகள் தொடர்பாகவோ - நில அளவைகள் மேற்கொண்டு, திட்ட வரைபுகளை மேற்கொள்ளப் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக - முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

வெளிமாவட்டங்களிலுள்ள நில அளவையாளர்கள் - இங்கு வரத்தயங்குகின்றனர் எனவும், ஐந்து பேர்கொண்ட குழு யாழ். மாவட்டத்தில் இருந்து வருகை தந்தவேளை, குறித்த வேலைகளை மட்டுமே முடித்து வைக்க முடிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (17)

### வர்த்தக சங்க அங்கத்தவர்களுக்கான சம்மேளன அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக ஸ்தாபனங்களும் அவர்களின் எல்லைக்குட்பட்ட வர்த்தகர் சங்கங்களில் அங்கத்தவர்களாகச் சேர வேண்டுமெனவும், யாழ்.மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக சங்கங்களும் இல.165, மானிப்பாய் வீதியிலுள்ள யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனத்தில் அங்கம்வகிக்க வேண்டுமெனவும், யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளன நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### நாடுமுழுவதும் நாலாயிரம் பாடசாலை நூலகங்கள்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின்கீழ் நாடு முழுவதிலும் - நாலாயிரம் பாடசாலை நூலகங்கள் புனரமைக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் இந்திராணி காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்கீழ் - பாடசாலைகளுக்கு மும்மொழி நூல்களும் வழங்கப்பட்டு வருவதாகவும், இதுவரை 2596 பாடசாலைகளுக்கு அத்தகைய நூல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை நூல்கள் வழங்கப்படாத பாடசாலைகளுக்கு, நூல்கள் வழங்க மாகாணக்கல்வித் திணைக்களங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பயிற்சி முடித்த பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன!

சுருக்கெழுத்து, தட்டெழுத்து மற்றும் தையல் பயிற்சியை நிறைவு செய்த பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் - கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளை மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கச் செயலர் க.கணேஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் - கிளிநொச்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சிவசாமி கலந்துகொண்டு, பயிற்சியை நிறைவு செய்த பெண்களுக்குச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட கிளையினரால் நடத்தப்பட்ட பயிற்சிநெறியில், 70 பெண்கள் பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# 250 பாகிஸ்தானியருக்கு பிணையில் செல்ல அனுமதி

சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்று, கடந்த மாதம் தங்காலைக் கடலில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 264 பேரில், 251 பேரை பிணையில் விடுவிக்க தங்காலை நீதிமன்றத்தின் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த 264 பேரில், 250 பேர் பாகிஸ்தானியர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், மிகுதிப் 14 பேரையும் தொடர்ந்தும் மேலதிக விசாரணைக்காக விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

வாழ்க வளமுடன்




ஏழாவது அகவையில்



பெயர் : ந.சொர்ணமுகி
முகவரி : நாவற்குழி தெற்கு, கைதடி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------
முகவரி :----------------
பிறந்த ஆண்டு:----------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றார் ஒப்பம்



# நடனம் அறிவு சார்ந்த கலைமட்டுமல்ல

**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நடன விரிவுரையாளராகவும், கொக்குவில் கலாபவனம் நடனப்பள்ளியின் ஆசிரியராகவும் கடமையாற்றும் சாந்தினி சிவநேசனுடனான நேர்காணல் இது.**



சாந்தினி சிவநேசன்

**அறுபத்து நான்கு கலைகள் இருக்கும்போது, தங்களுக்கு நடனக்கலையின் மீது ஆர்வம் ஏற்பட ஏதாவது காரணம் உண்டா?**

என்னுடைய சூழலைத்தான் காரணமாகக் கூறமுடியும். என்னுடைய தந்தையார் ஒரு நடன ஆசிரியராகப் பணிபுரிகின்றார். என்னை நடனக்கலையில் சிறப்பிடம் பெறவைக்க வேண்டுமென்ற அவரின் விருப்பமும், என்னிடத்தில் இயல்பாக இருந்த தாராளமுயற்சியும், எனக்கு நடனக்கலை மீது ஆர்வத்தை ஏற்படுத்தின என்று கூறலாம்.

**உங்களுடைய தந்தையார் மட்டும்தான் நடனக்கலை ஆசிரியராக இருந்தாரா அல்லது உங்களுடைய பரம்பரையில் வேறு. யாராவது இக்கலையில் ஆர்வமுடையவராக இருந்திருக்கிறார்களா?**

என்னுடைய தகப்பனாரைவிட, என்னுடைய பாட்டனாரும் ஒரு அண்ணாவியராக இருந்தவர். முன்பெல்லாம் இந்தியாவிலிருந்து கலைக்குழுக்களை இலங்கைக்கு அழைத்து வந்து கலை நிகழ்ச்சிகளை நடத்தியவர். அதைத்தொடர்ந்து 'கலாபவனம்' என்பன நிறுவி, அதை நடத்தி வந்தவர் எனது தந்தையாராவர். இப்போது தந்தையார் செய்த பணியை நான் செய்துவருகின்றேன். எனது சகோதரிகளும் - கனடாவில் றொரன்ரோவில் ரோசன்ரோ கலாபவனம் நிறுவி, நடன வகுப்புக்களை நடத்தி வருகின்றனர்.

**பரதக்கலை இவ்வளது தூரம் வளர்ச்சி பெற்றமைக்குக் காரணம் என்னவாக இருக்கும்?**

குறித்த ஒரு சக்கரவர்த்திக்காகத் தோற்றுவிக்கப்பட்ட இக்கலையானது, பின்னர் சமூகமயப்பட்டுள்ளது. அரசின் கல்வித் திட்டத்தில் நடனக்கலை ஒரு பாடமாக்கப்பட்டுள்ளது. அறிவுசார்ந்த கல்வியுடன், அழகுசார்ந்த கல்வியும் இணையும்போது, கலை முழுமையடைகின்றது. அந்த முழுமையானது சமூக மறுமலர்ச்சியை நோக்கிச் செல்வதாக அமையும். இவ்வாறான ஒரு பின்னணியே பரதக்கலை இவ்வளவு தூரம் வளர்ச்சிபெறக் காரணம் எனக் கருதுகின்றேன்.

**நீங்கள் யாரை உங்களுடைய குருவாகக் கொண்டீர்கள்?**

எனது குரு என்றால் முதலில் என் தந்தையையே குறிப்பிடுவேன். பின்னர், இந்தியாவைச் சேர்ந்த அடையாறு லக்ஸ்மன், விஸ்வ கலாகேந்திரம் குரு, ஜீ.பத்மபூசனம் ஆகியோரைக் கூறலாம்.

குருவை முழுமையாக நம்பி, அவரிடத்து கலையைப் பயில வேண்டும். சிலவேளைகளில் குருவின் தன்மையும், மாணவரின் தன்மையும் வேறுபட்டிருக்கும். இந்த வேளையில், குருவின் மனோநிலைக்கேற்பச் செயற்படவேண்டும் என்பதையும் இவ்விடத்தில் சொல்ல விரும்புகின்றேன்.

**உங்களுடைய படைப்புக்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

எனது படைப்புக்களில் 'ஆர்கெல்லோ சதுரர்' எனப் பல இடங்களிலே தொடர்ச்சியாக ஒரு பதம் இடம்பெறும்.

ஒரு முதிர்ந்த கலைக் குடும்பத்தின் முழுமையான உழைப்பை எனது படைப்புக்களில் வெளிப்படுத்தியுள்ளேன். நீண்ட நேரப் படைப்பாகவும், எனது படைப்பு அமைவதுண்டு. பின்னணியிலிருந்து குரல்கொடுக்க, நடிப்பினூடாகப் பாத்திரத்தை பேசிவைக்கும் தன்மையையும் காணலாம்.

எனது படைப்புக்களில் பிரதானமாக எமது (தமிழர்) பிரச்சினைகளை மறைமுகமாக வெளிப்படுத்தினோம். போர் என்றால் அழிவு என்பதை தத்ரூபமாகக் கொண்டுவந்தோம்.

**விரிவுரையாளராகப் பணிபுரிந்துகொண்டும், நடனப்பள்ளி நடத்துவதற்கான காரணம் கூறமுடியுமா?**

என்னிடம் உள்ள நடனக்கலைமீதான பக்தியும், என்னுடைய தந்தையாரின் அவாவினைப் பூர்த்தி செய்யவேண்டும் என்ற விருப்பமும் காரணமாகக் குறிப்பிடலாம்.

நடனப்பள்ளியில் பிறஇடங்களில் இருந்து வந்து பயிற்சிகளை மேற்கொள்கிறார்கள். இதேவேளை, நடனப்பள்ளி என்பது எங்களுடைய பரம்பரைச்சொத்தாக நான் கருதுவதுதான் முதன்மைக் காரணமாகும்.

**நடனத்துறையில் நீங்கள் பெற்ற விருதுகள் பற்றிக் கூறுவீர்களா?**

கலாசார பேரவையால் 'கலைஞான சுடர்' என்ற விருதையும், வலயரீதியில் 'நல்லாசிரியர்' விருதும், கம்பன் கழகத்தினால் கௌரவிப்பும் என்னுடைய விருதுகள் என்று கூறமுடியும்.

**உங்களுடைய மாணவர்கள் பற்றிக் கூறமுடியுமா?**

என்னிடத்தில் பயில்பவர்கள் பலர் - பல திறமைகளை ஈட்டி வருகிறார்கள். அண்மையில் என்னிடம் நடனப் பயிற்சி பெற்ற மாணவி - புலமைப் பரிசில்பெற்று, இந்நதியா செல்கிறார். நீண்ட இடைவெளிக்குப் பின்னர், இப்போது ஒரு மாணவிக்கு யாழ்.நகரிலிருந்து இந்தியா செல்வதற்கான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. எனது மாணவர்கள் ஆசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் கடமையாற்றுவதுடன், வேறு இடங்களிலும் நடனப் பள்ளி நடாத்துபவர்களாகவுள்ளனர்.

**நடனப்போட்டிகளில் நடுவராக இருந்த அனுபவம் பற்றிக் கூறமுடியுமா?**

நான் 2000 ஆம் ஆண்டிலிருந்து - கனடா, சுவிஸ், பிரானஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு அவர்களின் அழைப்பையேற்று, நடுவராகச் சென்று வந்துள்ளேன். ஒரு போதும் நடுநிலைமை தவறி நடந்தது கிடையாது. சரியாகவே தீர்ப்பளித்ததாக நம்புகிறேன்.

**நடனக்கலை பயில்பவருக்கு, பயிலவிரும்புபவர்களுக்கு நீங்கள் கூறவிரும்பும் கருத்து யாது?**

நாட்டியக் கலையைப் பொறுத்தளவில் - நான் கூற விரும்புவது குருபக்தியே முதலில் அவசியமான ஒன்றாகும் என்பதுதான்.





# அழகு சார்ந்ததாகவும் விளங்குகிறது

அடிப்படை மாறாத பக்திபூர்வமான நடன ஆக்கங்கள் வெளிவர வேண்டும். அத்துடன், ஆசிரியர்களாக வெளிவருவோர், முழுமையாகச் செயற்படக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

நடனத்தைப் பழக்குவது ஒருவர் நட்டுவாங்கம் செய்வது இன்னோருவர் என்ற நிலை இருக்கக்கூடாது என்பதே எனது கருத்தாகும். ❖

**நேர்காணல்: இ.விஜேந்திரன்**

# குழந்தைகளின் சருமத்திற்கு மென்மையான பாதுகாப்பு

சின்ன வயதில் குழந்தைகளின் சருமம் கெட்டுப்போவதற்குக் காரணம் - காற்றில் இருக்கும் தூசிகள், அசுத்தமான சுற்றுப்புறம், அளவுக்கதிகமாக வெயில்படுவது, தூசிகள் உடம்பில் படுவது என்று பல காரணங்களைச் சொல்லலாம்.

இதனால் குழந்தைகளுக்கு அடிக்கடி அரிப்பும், எரிச்சலும் ஏற்படுகிறது. இதிலிருந்து குழந்தைகளைக் காப்பது பற்றிப் பார்க்கும்போது -

❖ குழந்தைகளின் சருமத்திற்குப் பாதுகாப்பை அளிக்கக்கூடிய சோப்புக்களையே தினமும் பயன்படுத்த வேண்டும்.

❖ ஒவ்வொரு குழந்தையின் சருமமும், ஒவ்வொரு தன்மை கொண்டதாக இருக்கும். சில குழந்தைகளுக்குத் தோல் வியர்த்து இருக்கும். இன்னும் சில குழந்தைகளுக்குத் தோலில் எண்ணெய் வடியும். இந்த இயல்புகளுக்கேற்ப சோப்பைப் பயன்படுத்தி, சருமத்தைக்காக்க வேண்டும்.

❖ குழந்தைகள் சுத்தமான, நன்கு துவைக்கப்பட்ட ஆடைகளையே அணிந்து கொள்ளவேண்டும். ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது ஆடை மாற்றவேண்டும்.

❖ குழந்தைகளுக்குச் சிறந்த ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் ஊட்டவேண்டும். துரித உணவு வகைகளைத் தவிர்க்கவும். குளிர்ந்த பால், தயிர்க்கட்டி, பழங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கும், சரும மினுமினுப்பிற்கும் உகந் தது.



❖ பருத்தியிலான துணிகளை அணியச் செய்வது குழந்தைகளின் சருமத்திற்கு நல்லது.

❖ உடம்பில் ஏதேனும் ஒரு பகுதியில் நோய்வாய்ப்பட்டிருந்தால், அந்தப் பகுதியைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

❖ குழந்தைகள் நடமாடும் இடங்களை, முக்கியமாக வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம்.

உங்கள் குழந்தைகளின் சருமப் பாதுகாப்பு, உங்கள் கைகளில் இருக்கிறது.

அதைச் செம்மையாகச் செய்ய வேண்டியது உங்கள் கடமை.

# அன்னையின் அவலம்

கண்ணிலே நீரின் வெள்ளம்
இதயத்திலே இரத்த வெள்ளம்
வேதனையிலே வெந்து துடிக்கும்
யாழ் அன்னையவள் திருமுகம்
பறவையினம் தாலாட்ட
பாவலர்கள் பாராட்ட
பரவசத்தில் பூத்திருக்கும்
பாவையவள் மலர்முகம்

கோயிலெல்லாம் திருவிழாக்கள்
வீதியெல்லாம் பெருவிழாக்ள்
எங்கும் ஓயாத கலகலப்பு
எப்பவும் மாறாத சலசலப்பு
நாய்க்கும் பயமில்லை
பேய்க்கும் பயமில்லை
வெண்ணிலாவின் வெளிச்சத்திலே
விண்மீன்கள் கண்சிமிட்ட
பவனிவரும் மனித இனம்
நட்டநடு ராத்திரியில்
சந்நிதி கோயிலிலே சாந்தன் கோஷ்டி
கந்தசாமி கோயிலிலே காத்தான் கூத்து
விடிய விடியப் பார்த்துவிட்டு
விசிலடித்து திரும்பும் விடலைகள்

ஓ எப்படி இருந்தவள்
இப்படி மாறியதேன்?

பால்புட்டி தொட்டகைகள் மதுபுட்டி
தொட்டதாலா?
விசிலூதி மகிழ்ந்த நாங்கள் புகையூத
துடித்ததாலா?
கண்ணியமாய் இருந்தவர்கள் காடை
யராய் மாறியதாலா?
ஏன்? ஏன்? இப்படி அவலமாய்
ஆனாள்

எப்படி எப்படி மாறினர்ர்கள்
என்மைந்தர்கள் என்ற கவலை
அன்னையின் நெஞ்சு வெடிக்குது
என் மைந்தனை யார் காப்பாரென்று
தாயின் உள்ளம் அலறித்துடிக்குது
என் மக்களை யார் மீட்பாரென்று
ஐயோ! பாவம் அவள்
அவள் வேதனையை யார் துடைப்பார்.
அவள் கண்ணீரை யார் அணைப்பார்?

கே.ஆர்., கோப்பாய்.

# எக்லெஸ் கேக்

**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| ரின்பால் | - | 1 பெரியது |
| சீனி | - | 1/4 kg |
| மாஜரின் | - | 1/2 kg |
| மா | - | 1/4 kg |
| ரவை | - | 1/4 kg |
| கொக்கோ பவுடர் | - | 3 மேசைக்கரண்டி |
| கஜூ | - | 50 g |
| பேரிச்சம்பழம் | - | 3/4 kg |
| தேயிலை | - | 25 g |
| வனிலா | - | தேவையான அளவு |
| சாதிக்காய் | - | தேவையான அளவு |
| அப்பச்சோடா | - | 1 தேக்கரண்டி |
| பேக்கிங்பவுடர் | - | 1 தேக்கரண்டி |



**செய்முறை**

முதலில் மாஜரினையும், சீனியையும் ஒன்றாகச் சேர்த்து அடிக்கவும். ஓரளவு அடித்ததும் அதற்குள் ரின்பாலையும் சேர்த்து நன்றாகச் சீனி கரையும்வரை அடிக்கவும். பின்னர், மாவை அரித்தெடுத்து அதற்கு 3 மேசைக்கரண்டி கொக்கோவைப் போட்டு அரிக்கவும். அதனுடன் ஒரு தேக்கரண்டி பேக்கிங் பவுடரையும் சேர்த்து, மூன்று அல்லது நான்கு முறை அரிக்கவும். பேரிச்சம்பழத்தை விதை நீக்கி, சிறு சிறு துண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்தினுள் இட்டு, தேயிலைக்குள் கொதிநீரை விட்டு, வடித்து வெட்டிய பேரிச்சம்பழத்தினை ஊறவிடவேண்டும். அதற்குள் 1 தேக்கரண்டி அப்பச்சோடாவையும் சேர்த்து ஊறப்போடவும். இதனைக் கேக் அடிப்பதற்கு முதல் நாள் இரவு ஊறப்போட்டால் போதுமானது. ஊறவிட்ட பேரிச்சம்பழக் கலவைக்குள் ரவையைச் சேர்த்து கட்டியாகாதவாறு கீலக்கவும். அடித்த மாஜரின் கரைசலினுள், பேரிச்சம்பழக் கலவையையும், அரித்தெடுத்த மாவையும் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கலக்கவும். கஜூவை சிறு துண்டுகளாக வெட்டவும். கலவை நன்றாகக் கலக்கப்பட்டதும் சாதிக்காய்ப் பவுடர், வனிலா, கஜூ என்பவற்றை அளவாகச் சேர்க்கவும். பின்னர் கேக்தட்டில் Oil paper இற்கு மாஜரின் பூசி, அடித்த கேக்கலவையை ஊற்றி, ஒரே மட்டத்திற்குப் பரவி Bake செய்து கொண்டபின், விரும்பிய வடிவத்தில் வெட்டிப் பரிமாறிக் கொள்ளலாம்.

# பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைபடுதல் நோய்

**வெள்ளைபடுதல் என்றால் என்ன?**

கருப்பையின் உட்சுவரில் இருந்தோ, பிறப்பு உறுப்புகளின் தசைப்பகுதியில் இருந்தோ, சளி போன்ற வெள்ளை நிறமான பிசுபிசுப்பான திரவம் வெளிப்படுவதையே வெள்ளை படுதல் அல்லது வெள்ளைபோக்கு என அழைக்கின்றோம்.

**வெள்ளைப்போக்கு ஏற்படும் விதம்:**

நமது உடல் சாதாரணமாக நல்ல நிலையில் ஆரோக்கியமாக இருக்கும்போது, பிறப்புறுப்பை ஒட்டிக் காணப்படும் தசைப்பகுதிகள், உட்சுவர்கள், அங்கு காணப்படும் சுரப்பிகள்- பிறப்பு உறுப்பை வழவழப்பு ஆக்குவதற்கும், உடற்கூற்றின் இயல்பான பல நிலைகளுக்காவும் ஒரு திரவத்தைச் சுரக்கின்றது. ஆரோக்கியமான நம் உடல் நிலை - பிறநோய்களினால் பாதிக்கப்படும்போதோ அல்லது கருப்பையோ, பிறப்புறுப்போ உறுத்தல் அடையும்போதோ, மேற்சொன்ன திரவம் அளவுக்கு அதிகமாகச் சுரந்து, வெள்ளைப்போக்காக வெளியேறுகிறது. இத்திரவம் அதன் நிறத்திலும், இயல்பிலும்கூட மாறுதலை அடைகிறது.

**வெள்ளை படுதலின் வகைகள்**

வெள்ளைப்போக்கு- வெள்ளை நிறமாக மட்டுமல்லாமல், பல நிறங்களில் வெளியாகிறது. நிறத்தைக் கொண்டு என்ன நோய் எனக் கணிக்கலாம். பால் போன்றோ, தயிர் போன்று கட்டியாகவும், முட்டை வெண்கரு போன்றும், சில பெண்களுக்குச் செங்கல்மங்கலான கசிவும் ஏற்படலாம். அதேபோல், வெள்ளைப்போக்கின் அளவும் பெண்ணுக்குப் பெண் மாறுபடலாம். சிலருக்கு விட்டு விட்டுச் சிறிதளவு கசியும். சில பெண்களுக்கு மாதக் கணக்கில், ஏன் வருடக் கணக்கில்கூடத் தொடர்ந்து வெள்ளைபடுதல் ஏற்படலாம்.

சாதாரணமாக ஏற்படும் வெள்ளைப்போக்கு மூக்கிலிருந்து நீர் வடிவதுபோல் வெளியாகும். இது துணியில் பட்டால் கறை படியாது.

கருப்பையில் உண்டான நோய்களின் காரணமாக ஏற்படும் வெள்ளைப்போக்கு- காரத்தன்மை உடையதாகவும், துர்நாற்றம் கொண்டதாகவும், துணிகளை அரிக்கும் தன்மை உடையதாகவும் இருக்கிறது.

**வெள்ளைபடுதல் அதிகமாகத் தோன்றும் காலங்கள்**

பொதுவாக, மாதவிடாய் காலங்களில் வெள்ளைபடுதல் அதிகமாக இருக்கும். சில பெண்களுக்கு மாதவிடாய் உணடாவதற்கு முன்னரோ, பின்னரோ வெள்ளைபடுதல் ஏற்படும். சிலருக்குச் சாதாரணமாக எல்லா நாட்களிலும் வெள்ளைப்போக்கு தொடர்ந்து இருக்கும்.

**வெள்ளைபடுதல் நோய் ஏற்படுவதற்கான காரணங்கள**

❖ சிறுகுழந்தைகளின் சுகாதாரமற்ற பழக்கவழக்கங்கள்- வெள்ளைபடுதல் நோய்க்குக் காரணமாகின்றது.

❖ இளவயதுப் பெண்களில் பருவம் அடைவதற்கு முன்போ அல்லது பின்போ இந்த வெள்ளைபடுதல் நோய் காணப்படலாம். இவர்களுக்குச் சுகாதாரமற்ற உள்ளாடைகள், குடற்புழுக்கள், அதிகமான காம உணர்வு மற்றும் சுய இன்பம் காணுதல் இவைகளாலும் வெள்ளைபடுதல் நோய் ஏற்படும்.

❖ சிலருக்கு வெள்ளைபடுதல் நோய் பரம்பரை நோயாக இருக்கின்றது. இன்னும் சிலருக்குச் சத்தற்ற உணவு மற்றும் ஊளைச்சதை கொண்ட பெண்களுக்கும் ஏற்படுகின்றது.

❖ பொதுவாகக் குளிர்ந்த, ஈரமான பகுதியில் வசிப்பவர்களுக்கு அதிகமாக உண்டாகிறது.

❖ தவறான உணவுப் பழக்கங்கள், கெட்டுப்போன உணவுப் பொருட்களை உண்ணுதல் மற்றும் இதர காற்றுக்கள் இவைகளினால் அதிகமான நச்சுத்தன்மை ஏற்பட்டு, அவை தோல் மற்றும் வயிறு, நுரையீரல், சிறுநீரகங்கள் இவைகளின் மூலமாக வெளியேற்றப்படாமலுள்ள நிலையில் பெண்களின் கருப்பை, பிறப்புறுப்புகளிலுள்ள சளிச்சவ்வு மூலமாக வெளியேற்றப்படுகிறது. இதுவே வெள்ளைபடுதல் ஆகும்.

❖ சில பெண்களுக்குப் பேதி மருந்துகளை அளவுக்க அதிகமாக பயன்படுத்துவதாலும், வெள்ளைபடுதல் நோய் உண்டாகும்.

❖ சில பெண்களுக்கு மாதவிடாய் மாதந்தோறும் முறையாக ஏற்படாது. இவர்கள் மாதவிடாயைத் தூண்டும் மருந்துகளை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதாலும் இந்நோய் ஏற்படுகின்றது.

❖ சில பெண்கள்- செயற்கையான கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தும்போது ஏற்படுகின்ற ஒவ்வாமை காரணமாகவும், இந்த வெள்ளைபடுதல் நோய் ஏற்படலாம்.

❖ கருப்பைக் கழுத்துப் புற்றுநோய், கருப்பையில் உண்டாகும் புற்றுநோய், பால்வினை நோய்கள் முதலியவற்றின் அறிகுறியாகவும் இந்நோய் ஏற்படும்.

❖ கோபம், வெறுப்பு, வருத்தம் ஆகிய உணர்வுகளுக்கு ஆட்படுதலாலும் இந்நோய் உண்டாகுகின்றது.

❖ சில பெண்களுக்கு மிகுதியான உடலுறவின் காரணமாகவும் வெள்ளைபடுதல் உண்டாகும்.

❖ கண்டமாலை நோய் (**Scrofuloderma**), பசலை நோய் (**Chlorosis**), கடிதடத்தில் தாபிதம் (**Viginits**), கருப்பை இடம் பெயர்ந்திருத்தல் (**Uterus proloapse**), ஒழுங்கற்ற மாதவிடாய், ஒழுங்கற்ற பேறுகாலம், கருச்சிதைவு (**Abortion**), வயிற்றுக் கோளாறுகள், குடற்பகுதியிலுள்ள கிருமிகள் ஆகியவற்றின் காரணமாகவும் வெள்ளைபடுதல் நோய் ஏற்படலாம்.

**வெள்ளைபடுதல் நோயின்போது காணப்படும் அறிகுறிகள்**

இது சிறுநீர் இறங்குவதற்கு முன்போ அல்லது பின்போ வெண்ணிறத்துடன் சீழ்போல் வெளிப்பட்டு, சிறுநீர் போகும்போது எரிச்சலையும், கடுப்பையும் ஏற்டுத்தும். இது அதிகமாகக் காணப்பட்டால் -உடம்பு மெலிந்து போவதுடன் இடுப்பு, கை, கால், உடம்பு வலியையும் உண்டாக்குகிறது. இந்த வெள்ளைபடுதல் நோய் காரணமாகப் பெண்களின் உடல் நலிவடைந்து, விரைவிலேயே அவர்கள் களைப்படையக்கூடும். அவர்களுக்கு வயிற்றைப் பிடித்து இழுப்பது போன்ற உணர்வும் இருக்கும். இந்நோயினர்க்கு மலச்சிக்கல், அடிக்கடி தலைவலி, தொடர்ந்து அரிப்பு ஆகியவைகள் இருக்கும். சிலருக்குப் பிறப்புறுப்புகளில் அரிப்பும், புண்ணும்கூட ஏற்படுவதுண்டு. நாட்பட்ட நிலையில், அடிக்கடி மயக்கம், சோர்வு முதலியவைகளுடன் ஒருவிதமான மன உறுத்தலும், கண்களைச் சுற்றிக் கருவளையமும் தோன்றும். சில பெண்களுக்கு உடல்மெலிந்து, வெளிறி முகம் வீங்கிக் காணப்படுவதோடு, இடுப்பு வலி, மூட்டு வலி வேலை செய்யும்போது இதயப்படபடப்பு, மூச்சு வாங்குதல் முதலிய குணங்குறிகளும் இருக்கும். இந்நோயின் நாட்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட உறுப்புகளில் அழற்சி ஏற்பட்டு வெளிவருகின்ற கசிவு - சீழ்போல மஞ்சள் நிறமாக அதிக துர்நாற்றத்துடன் வெளிப்படும்.

இந்த வெள்ளைபடுதல் நோய் பொதுவாக எல்லாப் பெண்களுக்குமிருப்பதால், இதைச் சாதாரணமாக நினைத்து அலட்சியமாக இருந்து விடுகிறார்கள். அவ்வாறு இருப்பது மிகவும் தவறு. ஏனென்றால், இந்நோய் நாட்பட்ட நிலையில் பல நோய்களுக்கு அடிப்படையாக அமைவதோடு, புற்றுநோய்க்கும் வழி வகுக்கும்.

**மருந்துவம:**

பொதுவாக வெள்ளைபடுதல் நோய் உள்ளவர்கள் உடலில் நோய் எதிர்ப்பு வகையில் தேக ஆரோக்கியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

சத்தான உணவு, உடற்பயிற்சி, ஓய்வு, சுகாதாரமான பழக்கவழக்கங்கள் அவசியம்.

செரிமான கோளாறுகளாலும், குடற்பகுதியில் உண்டாகும் பிறகாரணங்களாலும் உண்டாகும் வெள்ளைப்படுதல் நோய் எளிதில் குணமாகும்.

**வெள்ளைபடுதல் நோய் கண்ட பெண்கள் கடைபிடிக்க வேண்டிய உணவு முறைகள்**

குறித்த நேரத்தில் எளிதில் செரிக்கும் எளிய உணவுகளை, சுகாதாரமான முறையில் தயாரித்து உண்ணவேண்டும்.

அதிக எண்ணெய், காரம், மசாலாப்பொருட்கள், கோப்பி, தேநீர் ஆகியவற்றைத் தவிர்க்கவேண்டும்.



உணவுகளில் வறுவல் போன்று எண்ணெயில் அதிகம் கலந்தவைகளை தவிர்த்து, ஆவியில வேகவைத்த உணவுகளை உண்பது மிகவும் நல்லது.

சுத்தமான காற்று, நல்ல தூக்கம் அவசியம்.

தினந்தோறும் காலையில் எளிய உடற்பயிற்சிகள் செய்யலாம்.

கீரை வகைகள், காய்கறிகள், பழங்கள், புரதச்சத்துள்ள பருப்பு வகைகள், பால், மோர், இளநீர் முதலியவைகளை உணவில் அதிகளவில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

மனக்கவலைகளை அகற்றி, மனமகிழ்ச்சியோடு இருந்து எளியமுறையில் சித்த மருந்துகளைக் கடைபிடிக்க, குணம் கிடைப்பது உறுதி.

இந்த வெள்ளைபடுதல் நோயைப்பற்றி வெளியே சொல்லப் பெண்கள் வெட்கப்பட்டு, சிகிச்சை செய்யாமல் இருந்துவிடுவார்கள். இது கருப்பைப் புற்றுநோயை மற்றும் பிறநோய்களின் அறிகுறியாகக்கூட இருக்கும் என்பதால், இதை அலட்சியமாக எண்ணாமல், உடன் மருத்துவரைக் கலந்தாலோசித்துச் சிகிச்சை மேற்கொள்ளுவது நலம்.

## நாமும் நகமும்

நகங்களில் ஏற்படும் வெடிப்புகளுக்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன. வெடிப்புகள் - காய்ந்துவிடும் நகங்களில்தான் தோன்றுகின்றன. இதனால், நகத்திற்குரிய **Cream** பூசுவதன் மூலம் ஈரப்பதமாக வைத்துக் கொள்ளமுடியும்.

நகங்களுக்கு நகப்பூச்சு இடும்போது, நீண்ட இடைவெளியின் பின் மீண்டும் இடுதல் வேண்டும். அடிக்கடி போடக்கூடாது. இதனால், நகங்களில் ஈரச்சத்து புகவிடாமல் தடுக்கக்கூடிய சக்தி நகப் பூச்சுக்களுக்கு உண்டு.

நகங்களை வெட்டும்போதும், அதன் விளிம்புகளைச் சீராக்கும்போதும் மேலிருந்து கீழ் அல்லது கீழிருந்து மேல் இவைகளில் ஏதேனும் ஒரு முறையைப் பின்பற்றலாம். வேறுமுறையில் வெட்டினால் நகங்கள் பலவீனப்படும்.

அதிகளவிலான காய்ச்சல், நகங்களில் ஏற்பட்ட காயங்கள், மன அழுத்தம் இவற்றினால் நகங்கள் பாதுகாப்பை இழக்கின்றன.

புரதச்சத்துக் குறைவாகவுள்ள உணவுகளை உண்பதால், நகத்தின் வளர்ச்சி மேலும் பாதிக்கும். நகங்களை நடுத்தர நீளத்திற்கு நீளமாக வெட்டிக் கொள்வதால் பாதுகாக்கப்படுகிறது.

# கர்ப்பிணிப் பெண்கள்

கர்ப்பிணிப் பெண்ணின் மனதில் என்றும் பிறக்கப்போகின்ற குழந்தையைப் பற்றிய எண்ணங்களைப் பற்றி சிந்தனை சுழன்ற வண்ணம் இருக்கும்.

பிறக்கபோகும் குழந்தை, போதிய ஆரோக்கியமானதாகப் பிறக்க வேண்டுமாயின், கர்ப்பிணித் தாயானவள் ஆரோக்கியத்துடன் இருப்பது அவசியம்.

ஆரோக்கியத்துக்கு உடலிற்கு ஊட்டச்சத்து மிக்க உணவுகள் சேரவேண்டியது அவசியம்.

ஊட்டச்சத்து என்னும்போது, விலை கொடுத்து வாங்கப்படுபவை மட்டும் ஊட்டச்சத்துமிக்கவை என எண்ணிவிடாதீர்கள்.



இறைச்சி, முட்டை, வாழைப்பழம் ஆகியன மட்டுந்தான் சத்துமிக்கவை என, நாம் நம்பக் கூடாது.

இறைச்சி, முட்டை, வாழைப்பழம் போன்றவற்றில் சத்து இருப்பது உண்மைதான். ஆனால், இவற்றை நாம் தேவையான நிறையின்படி வாங்கி உண்ணும்போது, இறைச்சியிலிருந்து எலும்பு நீக்கப்படும்போது, கணிக்கப்பட்ட நிறை குறைவடைவதையும், முட்டையிலிருந்து கோது நீக்கப்படும்போதும், அதன் கருவானது கணிக்கப்பட்ட நிறையிலிருந்து குறைவடைவதையும், வாழைப்பழத்தின் தோலை நீக்கும்போதும், அதன் கணிக்கப்பட்ட நிறை குறைவடைவதையும் நாம் காணலாம்.

உதாரணத்திற்கு, நாம் நூறு கிராம் வாழைப்பழம் வாங்குகின்றோம் என்றால், அவற்றின் தோலை நீக்கிவிட்டால், 35 வீதம் நிறை குறைந்துவிடுகின்றது. அதாவது, 65 வீதம் பழத்தை மாத்திரமே உண்ணுகின்றோம்.

எனவே, இவ்வாறு நிறையில் குறைந்த அளவிலானவற்றை உண்பதைவிட, செலவில் குறைந்த சத்து நிறைந்த மரக்கறி வகைகளை உண்பதில் பயன் அதிகமுள்ளது.

போஞ்சியை உண்பதனால், அதிக புரதச்சத்துக் கிடைக்கிறது. கர்ப்பிணிப் பெண்கள் விற்றமின் குளிசைகளையும் உண்பதுண்டு. குளிசையிலுள்ள அதே விற்றமின்கள், உணவு வகைகளிலும் உள்ளதை நாம் அறிந்திருப்பது மிகவும் நல்லது.

விற்றமின் **A** நிறைந்த உணவுகளான - கீரை வகைகள், பழங்கள், மரக்கறி வகைகளை உண்ணலாம்.

நாம் உண்கின்ற உணவு வகைகளை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து, அதன்படி சாப்பிட்டு வந்தால் நன்றாக அமையும்.

### அவை எவை என்பதைப் பார்ப்போம்

**முதலாவது பிரிவு -**

சோறு, கிழங்கு, பாண், மாப்பொருள் உணவுகள் என்பவற்றை உண்பதன்மூலம் புரதச்சத்து, விற்றமின் **B,** கல்சியம், இரும்புச்சத்துக்களைப் பெறமுடியும்.

**இரண்டாவது பிரிவு -**

மரக்கறி வகைகள், பழவகைகள் போன்றவற்றிலிருந்தும் நிறைவான சத்துக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**மூன்றாவது பிரிவு -**

இறைச்சி, மீன், தானியங்கள் அடங்கும். இவற்றிலிருந்து - புரதச்சத்துக்கள், இரும்புச்சத்துக்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**நான்காவது பிரிவு -**

பால், பால்கலந்த உணவு வகைகள் அடங்கும். இவற்றில் - புரதச்சத்து, விற்றமின் **A**, கல்சியம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

## உணவில் கவனம் செலுத்த வேண்டும்

**ஐந்தாவது பிரிவு -**

எண்ணெய் வகைகள், கொழுப்பு வகை உணவுகள், மரக்கறி எண்ணெய், தேங்காய் எண்ணெய், சீஸ், பட்டர், மாஜரின் ஆகியன இவற்றில் அடங்கும்.

இவை நீரில் கரையாத விற்றமின்களை உறிஞ்சக்கூடிய மாற்றுச்சக்தியைச் சேமித்து வைக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கின்றன.

இந்த உணவு வகைகளில் சீனி சேர்க்கப்படவில்லை. இதில் அந்தளவிற்குச் சத்து இருப்பதாகக் குறிப்பிடமுடியாது. எனினும், கர்ப்பிணிகள் சில உணவு வகைகளில் சுவை சேர்ப்பதற்காகச் சீனி சேர்ப்பதில் தப்பில்லை.

எனவே, மேற்கூறப்பட்ட மரக்கறி, கீரைவகைகளைத் தவிர்க்காமல் உணவாக உட்கொண்டால், கர்ப்பமான தாயும் ஆரோக்கியமாக வாழலாம். பிறக்கும் குழந்தையும் ஆரோக்கியத்துடன் திகழும்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்*
*தேர்ந்துசெய் வ∴தே முறை*

*- திருக்குறள்*

## நமது நோக்கு

### கபடமான அரசியல்!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து உழைக்க வேண்டுமென்று இலங்கை அறிவுஜீவிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்தக் கோரிக்கை இன்றைய நிலையில் மிகவும் அவசியமானதாகவே இருந்தாலும், இத் தகையதொரு கோரிக்கை புத்திஜீவிகள் சங்கத்திடமிருந்து எழுந்திருப்பதுதான் ஆச்சரியமானது.

ஜனாதிபதி, பிரதமர் ஆகிய பதவிப் பொறுப்புக்கள் தற்போது இணைந்து, இசைந்துபோகக்கூடிய பதவிகளாகத் தெரியவில்லை. 1994 ஆம் ஆண்டுவரைதான் இணைந்து செயற்படும் நிலை நீடித்திருந்தது.

1977 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன உருவாக்கிய அரசியல் சாசனத்தின்படி, தோற்றுவிக்கப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை மற்றும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவி ஆகியவற்றுக்கிடையிலான உச்சக்கட்ட பிளவின் விளைவுகளை இப்போது நாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

தொகுதிவாரிப் பிரதிநிதித்துவமுறை நடைமுறையில் இருந்தபோது, நிறைவேற்று அதிகாரமில்லாத ஜனாதிபதிக் குச் சிக்கல் இருக்கவில்லை. ஆனால், மக்களால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியும், விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறைமையும் நடைமுறைக்கு வந்தபின்னர், 1994 இல்தான் இந்த இரண்டு பதவிகளுக்கும் இடையிலான விரிசல் நிலை உச்சக்கட்டத்தை அடைந்தது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவி பெரியதா அல்லது மக்களால் விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை மூலம் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றத்தில், பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைக்கும் அரசாங்கம் பெரியதா என்ற சிக்கல் எழுந்துள்ளது.

இந்தத் தருணத்தில், 1994 இல் டி.பி.விஜேதுங்க ஒரு பொம்மை ஜனாதிபதியாக இருக்க, ஜனாதிபதி சந்திரிகா சிலகாலம் பிரதமராக இருந்தார். சில மாதமே நீடித்த இந்த மந்தநிலை பின்னர் நீங்கிப் போய் ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டுமே பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் போய்ச்சேர்ந்தன.

2001 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறும்வரை நீடித்த இந்த நிலை, அதற்குப் பின்னராக நீடிக்கவில்லை. ஜனாதிபதி சந்திரிகாவும், ஐ.தே.க. அரசாங்கமும் எப்போதுமே முட்டிமோதிக்கொண்டு கீரியும் பாம்புமாக நடந்து கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இன்னும் இரண்டரை ஆண்டு காலப் பொறுப்பைத் தக்கவைத்துக்கொள்ள அதிகாரம் உள்ளது.

ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும் அரசாங்கம் இன்னொரு கட்சியைச் சேர்ந்ததாகவும் இருக்கும் போது, அரச நிர்வாக இயந்திரத்தைக் கொண்டு நடத்துவதென்பது சிக்கலுக்குரியதொரு விடயமே. அத்தகையதொரு சிக்கலுக்குரிய நிர்வாக நடைமுறைகளைக் கடந்த இரண்டு வருடகாலமாக இலங்கை அனுபவித்து வருகிறது.

இந்த நெருக்கடியான நிர்வாகச் செயற்பாடுகள் இனப் பிரச்சினைத் தீர்வில் எவ்வாறானதொரு பாரதூரமான சிக் கல்களை எற்படுத்திக்கொண்டிருக்கின்றன என்று எவருக் குமே சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த நாள் முதலாகப் புலிகளுடன் சமாதான முயற்சிகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்ற இந்தச் சமாதான முயற்சிகளுக்கு, ஜனாதிபதி சந்திரிகா கடுமையான எதிர்ப்பு தெரிவித்திருப்ப தோடு முட்டுக்கட்டையும் போட்டு வருகின்றார்.

இந்த நிலை எவ்வளவு காலம் நீடிக்குமோ அவ்வளவு காலத்துக்கு இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் தடங் கல்கள் நீடிக்கும் என்பது யதார்த்தமான சூழலாக இருக் கின்றது.

இதைத் தெளிவாகப் புரிந்துகொண்டே, அறிவுஜீவிகள் சங்கம் இத்தகையதொரு கோரிக்கையை முன்வைத்திருக் கிறது.

ஆனால், அறிவு ஜீவிகள் சங்கத்தின், இணைந்து செயற் படக்கோரும் அறிவித்தலுக்கு எந்தத் தரப்பிடமும் இருந்து சரியான ஆதரவு கிடைக்குமா என்பது சந்தேகத்திற் குரியதே.

இனப்பிரச்சினைத் தீர்வு என்பது - ஜனாதிபதி சந்திரி காவுக்கு ஒரு நிலைப்பாடுடையதாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இன்னுமொரு கோட்பாட்டின் அடிப் படையிலானதாகவும் இருக்கின்றது.

போர் மூலம் சமாதானம் என்று - இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்பட்டு, அதில் தோல்வி கண்டு விரக்தியின் விளிம்பில் நிற்கும் சந்திரிகா,

சமாதானப் பேச்சுக்கள் மூலம் புலிகளுடன் பேசி தீர்க் கலாம் என்று முயற்சிக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் அர சாங்கத்துடன் இணங்கி நடப்பாரென்றா எதிர்பார்க்க முடி யும்.

இந்த இரண்டு தரப்புக்களும் இணங்கியும், இசைந்தும் நடக்கத் தொடங்கினால் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை மிகவிரைவாகக் கொண்டு நகர்த்தமுடியும்.

அதேவேளை - இரண்டு நிர்வாக அலகுகளிலும் ஒரே கட்சி இணைந்து செல்வதனூடாக, இனப்பிரச்சினைக்கு தீர்வு கிட்டிவிடும் எனக் கனவு காணமுடியாது.

எனவே - இப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது ஜனாதிபதி, அரசாங்கம் என்ற நிர்வாக அலகுகளுக்கு அற்பாற்பட்ட தூய்மையான அரசியல் செயற்பாட்டின் மூலமே ஏற்பட முடியும் என்பதே உண்மைநிலையாகும்.

# சாத்திரத்தைக் கேட்டதால் தான் சந்திரிகா கஷ்டப்பட்டுப் போனாரோ?



### மேடம் சந்திரிகா அறிவது!

அவசரமாய் மீண்டும் உங்களுக்கே ஒரு கடிதம் எழுதவேண்டியிருக்கு. உங்கள் வீட்டைச் சுற்றி ? சாத்திரம் பார்க்கலையோ சாத்திரம்? என்று கூவிக்கொண்டு, நிறைய குறிசொல்ப வர்களும், குடுகுடுப்பைக்காரரும் திரிவ தாகக் கேள்விப்பட்டேன். ஏனென் றால், நீங்கள் உங்கள் வீட்டுக்கு வாஸ்துசாத்திரம் பார்த்ததாகச செய் திகள் வெளிவந்துள்ளன. அதனால் தான் அவசரமாக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

உங்கள் ஆட்சியின்போது, பெரிதாக அடிபட்ட ஒரு கதை. உங்கள் அம்மா சிறிமாவின் ஆட்சிக் காலத்தில், மக்கள் பாணுக்கு கியூவில் நின்றபோதும், இந்தக் கதையைச் சொன்னார்கள். அதை உங்களுக்கு யாரும் சொல்லியிருக்காயினம். நான் சொல்கிறேன்.

சில வருடங்களுக்கு முன் - பொருட்களின் விலை ஆனை விலை, குதிரை விலை விற்றது. ஆயுதங்களைத் தவிர, இலங் கையில் எல்லாமே அதிக விலை. ஓடிப்போன ஆமிக்காரர் விற்ற ஏ.கே 47 உம், ஜே.ஆர் ரக கிரனைற்றும் தான் அப்போது மலிவுவிலை. அப்போது பொருட்களை வாங்க மக் களிடம் பணம் இல்லை. இருந்தாலும், அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு. பொருட்களை வாங்க மக்கள் கியூவில் நின்றனர். அப்போது ஒருவன் நீண்டநேரமாக கியூவில் நின்று, களைத்துப் போனான். அவனுக்குக் கோபம் வந்து விட்டது. உடனே அவன் இந்த ஜனாதிபதியை கொன் றால் தான், மக்கள் நிம்மதியாக இருக்கலாம் என்று சொன் னான். அதை யாராவது செய்யவேண்டுமே? பூனைக்கு யார் மணிகட்டு வது என்று, அருகில் கியூவில் நின்றவன் சொன்னான். உடனே இவன் - சரி மற்றவர்களுக்காக நான் அதைச் செய்கிறேன். இப்போதே சென்று ஜனாதிபதியை கொலை செய்துவிட்டு வருகிறேன் என்று புறப்பட்டானாம். சென்றவன் சில மணி நேரத்தில், திரும்பவும் அந்தக் கியூவிற்கே வந்தான். ஏன் திரும்பி வந்துவிட்டாய் என்று, மற்றவர்கள் கேட்டனர். அதற்கு அவன்? அங்கு ஜனாதிபதியைக் கொலை செய்ய ஒரு பெரிய கியூ நிற்கின்றது. அது இதைவிடப் பெரிய கியூவாக இருக் கின்றது. அதுதான் திரும்பி வந்துவிட்டேன் என்றானாம்.

இந்தக் கதையை - ஏன் நான் இப்போது உங்களுக்கு நினைவூட்டுகிறேன் தெரியுமா? உங்கள் வீட்டுக்கு, நீங்கள் வாஸ்துசாத்திரம் பார்த்ததாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

உங்களை எந்தக் கிரகம் ஆட்சி செய்கின்றது என்று, சோதிடரைக் கூப்பிட்டுப் பாத்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் ஆட்சி செய்யிறது, மக்களுக்கு நல்லதோ என்று பார்க்க மறந்து போனீர்கள்.

ஒருவருக்கு கஷ்டகாலம் வந்தால், அவர்கள் சுற்றியிருப் பவர்கள் எல்லாரையும் சந்தேகிப்பார்கள். அல்லது எல்லாரை யும் நம்புவார்கள். அதிகமாக சோதிடத்தையும், கடவுளையும் நம்புவார்கள். பலர் கஸ்டகாலத்தின்போது - அதிகம் நம்புவது சாமிமாரையும், சாத்திரிமாரையும் தான். சாகும்வரை வைத்தியர் விடார், செத்தபின்பும் சாத்திரிமார் விடார் என்பார்கள் - அமெ ரிக்கர்கள்.

'சாத்திரத்தைச் சுட்டு, சதுமறையைப் பொய்யாக்கி, சூத் திரத்தைக் கண்டு, சுகம்பெறுவது எக்காலம்? ' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. உங்களுக்கு இப்போது கஷ்டகாலம் வந்திருக்கிறது போலும். அதனால்தான், உங்கள் வீட்டுக்கு நீங்கள் இப்போது வாஸ்துசாத்திரம் பார்த்திருக்கிறீர்கள்.

உங்களுக்குத் தெரியுமோ - இந்த வாஸ்துசாத்திரத்தை கண்டுபிடித்தவர்கள் தமிழர்கள். ஆனால் இந்தவருட ஆரம்பத் தில், ஜேர்மனியர்கள் அதனை தமக்கு உரியது என்று உலக உரிமையைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இதற்கு சில இந்தியர் கள் துணைபோயிருக்கின்றனர். இப்போது இந்தியர்கள் தலை யிலடித்துக் கொள்கின்றனர்.

இந்த சாத்திரம் என்பது, தவறாக விளங்கிக்கொள்வதும் உண்டு. அதனால் சிலர் நன்மையடைந்திருக்கிறார்கள். சிலர் தவறாகப் புரிந்துகொண்டதால், தீமையடைந்திருப்பார்கள். உங்களுக்குத் தெரியுமோ சில நடிகைகள் பிரபல்யமானதற்கு இந்த வாஸ்துசாத்திரம்தான் காரணம். அதுவும் அவர்கள் அதனை தவறாகப் புரிந்துகொண்டது தான் காரணம்.

உண்மையில் ஜேர்மன்காரர்களே ஆராய்ந்து - விஞ்ஞான ரீதியில், சரியென்று கண்டு வாஸ்துசாத்திரத்தை, தமக்கு உரிமை கோரியுள்ளனர் என்றால், அதில் ஏதோ சில விஞ்ஞான உண்மைகள் இருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகின்றது. ஆனால், நாங்கள் அவற்றின் உண்மையான கருத்துக்களைப் புரிந்துகொள்ளாது, அவற்றை கடைப்பிடிக்கின்றோமோ என்

## கனடாவிலிருந்து ஒரு பகிரங்கக் கடிதம்

கின்ற சந்தேகமும் எழுகின்றது.

முன்னரும் - நீங்களும், சாத்திரக்காரரைக் கேட்டுத்தான் கஷ்டப்பட்டிருப்பியளோ, அல்லது, அவர்கள் சொன்னவை களை,நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டீர்களோ தெரியாது.

உதாரணமாய்...

கதிர்காமத்தானை நம்பி அவனைக் கேட்டு காரியங்களை செய்யுமாறு சொல்லியிருப்பினம். அவர்கள் கதிர்காமக் கந் தனைச் சொன்னதைத் தவறாகப் புரிந்துகொண்டு லக்ஸ்மன் கதிர்காமரைக் கேட்டு காரியங்களைச் செய்கிறீர்கள். கஷ்டகா லம் கழிவதற்கு பிரித்தோதுங்கோ என்று சொல்லியிருப்பினம். நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டு தமிழர், சிங்களவர் என்று பிரித்து ஓதுகின்றீர்கள்.

எல்லாப் பொருட்களையும் வடக்கை அல்லது கிழக்கை பார்ப்பதுபோல் வைக்குமாறு சொல்லியிருப்பார்கள். அதனால் தான் ஆட்லறிகளையும், பல்குழல் எறிகணைகளையும் நீங்கள் வடக்கையும் கிழக்கையும் பார்க்க வைத்தீர்கள் போலும்.

இப்படிக்கு
**வாசகன்**

*

## தலதா மாளிகை குண்டுவெடிப்பு சந்தேக நபர்களின்
# ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்பதா? 21 ஆம் திகதி தீர்ப்பு வெளியாகும் !

கண்டி தலதா மாளிகை குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர் பாக - இரண்டாம், மூன்றாம் எதிரிகளின் ஒப்புதல் வாக்கு மூலத்தை ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்ற விசாரணை யின் தீர்ப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

கண்டி மேல் நீதிமன்றத்தில், நடைபெற்ற மேற்படி விசாரணை களின்போது, எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அப் பாத்துரை விநாயகமூர்த்தி - இரண்டாம், மூன்றாம் எதிரிகளின் வாக்குமூலங்கள், அவர்களின் சுயவிருப்பின்றி, வற்புறுத்தலின் பேரிலேயே பெறப்பட்டது எனத் தெரிவித்தமையினால், இந்த விடயம் தொடர்பான விசாரணைகள் பல நாட்களாக மேற் கொள்ளப்பட்டுவந்தது.

இது தொடர்பாக, இருதரப்பு சட்டத்தரணிகளும் தமது தொகுப்புரையை - எதிர்வரும் 20 ஆம் திகதி நிகழ்த்துவதாக, மன்றில் தெரிவித்ததையடுத்து - நீதிவான் விசாரணைகளை, எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து, 21 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் எனத்தெரிவித்தார்.

### சிறுவனைச் சித்திரவதை செய்த
## பொலிஸார் ஒருவர் ஹற்றனில் கைது!

(கொழும்பு)

ஹற்றன் பகுதியில் - பொலிஸார் ஒருவர், 11 வயதுச் சிறுவனை வேலைக்கு அமர்த்தி, அச்சிறுவனை சித்திரவதை செய்தார், என்ற குற்றச்சாட்டின்பேரில் கைதாகியுள்ளார்.

14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்து தல் சட்டப்படி குற்றமாகும். இந்த நிலையில், ஹற்றன் பகுதி யில் பொலிஸார் ஒருவர், தன் வீட்டில் 11 வயதுச் சிறுவனை வீட்டு வேலைக்காக வைத்து, அச்சிறுவனைச் சித்திரவதை செய்துள்ளார்.

சிறுவன் சித்திரவதை தாங்காமல், காட்டுப்பகுதியூடாக தப்பி, ஹற்றன் நீதிமன்றில் சரணடைந்தான்.

அடுத்த விசாரணைக்கு நீதிமன்றில் ஆஜர்படுத்தும்போது, குறிப்பிட்ட பொலிஸாரைக் கைதுசெய்யும்படியும் - சிறுவனின் மனநிலையைப் பரிசோதனை செய்யுமாறும் நீதிவான் உத்தர விட்டார்.

## சட்டவிரோதமாக பணம் அச்சிட்ட மூவர் புத்தளம் பகுதியில் கைது!

(யாழ்ப்பாணம்)

புத்தளம் கற்பிட்டிப் பகுதியில் - நாவல்காடு என்னும் இடத் தில, சட்டவிரோதமாக அச்சிடப்பட்ட ஆயிரம் ரூபாய்த் தாள் களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இப்பகுதியில், சட்டவிரோதமாக அச்சிடப்படவிருந்த - 40 ஆயிரம் தாள்கள், கணினி இயந்திரம், ஸ்கானர் இயந்திரம் என்பவையும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பாக, கற்பிட்டிப் பகுதி பொலிஸாரால் - மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத் தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.85 | 97.28 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.08 | 156.70 |
| 1 யூரோ | 108.99 | 110.68 |
| 1 சுவிஸ் பிராங் | 70.44 | 71.21 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 62.30 | 63.52 |
| சவூதி றியால் | 25.00 | 25.00 |

# இனப்பிரச்சினையின் தோற்றுவாய்க்கு கதிர்காமர் என்ன தீர்வு முன்வைப்பார்?

இலங்கையின் முன்னாள் வெளியுறவு அமைச்சரும், தற்போது ஜனாதிபதியின் விசேட ஆலோசகராக இருப்பவருமான லகஷ்மன் கதிர்காமர் - இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஒரு கருத்தை அண்மையில் வெளியிட்டிருந்தார்.



ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இடைக் கால நிர்வாகசபைத் திட்டவரைபு தொடர்பாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சட்டத் தரணிகளுக்கு விளக்கம் அளிக்கும் கருத்தரங்கிலேயே, இந்தக் கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

ஐ.தே.முன்னணி அரசின் இடைக்கால நிர்வாகசபைத் திட்டவரைபை, அவர் முற்றாகவே அங்கு நிராகரித்துப் பேசியிருந்தார்.

தற்போதைய நிலையில் புலிகளிடம் இடைக் கால நிர்வாகத்தைக் கையளித்தால், அது தனிநாடு உருவாகுவதற்கே வழிவகுக்கும் என்பதே, அவர் அங்கு முன்வைத்த பிரதான மான கருத்தாகும்.

எனவே - அதற்கெதிரான பிரசாரங்களை,



இந்தச் சட்டத்தரணிகள் மக்கள் மத்தியில் முன்னெடுக்கவேண்டும் என்றும், அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அவருடைய இந்தக் கருத்துக்கள் தொடர்பாக, மாகாணசபையொன்றைச் சேர்ந்த கந்தசாமி - சில விவாதங்களைக் கிளப்பியிருக்கிறார்.

புலிகளுக்குத் தற்போது இடைக்கால நிர்வாகத்தை வழங்கக்கூடாது என்றால், அதற்கு மாற்றீடாக கதிர்காமர் என்ன திட்டத்தை வைத்திருக்கிறார் என்று கந்தசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இங்கு விவாதிக்க விரும்பும் விடயம் இவையல்ல.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விவாதங்கள் இப்படி சார்பாகவும், எதிராகவும் பல தளங்களில் தற்போது கொழும்பிலும், தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பொது ஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, சிஹல உறுமய, தேசிய பிக்குகள் முன்னணி எனப் பல்வேறு அமைப்புக்களினாலும் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த இனவாதம் தொனிக்கும் பிரசார நடவடிக்கைகள், இலங்கையின் அரசியல் நிலைமையில் எத்தகைய பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைக் காண்பதற்கு, இவர்கள் பலநாட்கள் காத்திருக்கவேண்டி ஏற்படாது.

இவர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டுவரும் இந்த இடைக்கால நிர்வாகசபைத் திட்ட வரைபுகள், தமிழ்மக்களது அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாக இல்லை என்றே, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் - மட்டக்களப்பில் ஆற்றிய உரையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

எனினும், இம்முறை தாம் இந்த வரைபை நிராகரிக்காமல், மாற்று யோசனைகளை முன் வைக்கவிருப்பதாக அவர் தெரிவித்திருக் கிறார்.

புலிகளால் முன்வைக்கப்படும் இந்த மாற்று யோசனைகள், இலங்கை அரசின் இத்தனை கால ஏமாற்றுதல்களையும் உலகுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டும் எனப் புலிகளின் முக்கியஸ்தர் வே.பாலகுமாரன் யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

ஆகவே, இந்த இடைக்கால நிர்வாகசபைத் திட்டவரைபு தொடர்பான கருத்தாடல்களை விடுத்து, முக்கியமாகக் கதிர்காமர் முன்வைத்த சில கருத்துக்களின்படி நோக்குவோம்.

இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வுகாணும் விடயத்தை - புலிகள் இழுத்தடித்து வருகிறார்கள் என அவர் தெரிவித்தமை, முக்கியமாகக் கவனிக்கவேண்டியது.

இனப்பிரச்சினைக்கு முதலில் ஒரு நிரந்தரமான அரசியற்தீர்வு காணப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை, அவர் இந்தக் கருத்தரங்கில் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

கதிர்காமர் - வெளிநாட்டு அமைச்சராக நீண்டகாலம் பணியாற்றிய அனுபவமுள்ள ஒருவர். அவரது அரசியல் வாழ்வு அனுபவங்களுக்கும் அப்பால் ஒரு அறிவாளியாக கருதப்பட்டவர்.

ஆகவே, இந்தக் கருத்துக்களை வெறுமனே குறுகிய அரசியல் ஆதாயந்தேடும் நோக்கத்துடன் வெளிப்படுத்தியிருக்கமாட்டார்.

எனவே, அவரது இந்தக் கருத்துக்களை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஒரு சாதகமான போக்கில் அணுகிப்பார்ப்பது பொருத்தமானது என்றே நான் கருதுகிறேன்.

நீண்டகாலம் தீர்வுகளின்றி இழுபட்டுவந்த ஒரு பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கும்போது, பிரசசினைகளின் காரணிகளைச் சரியாக இனங்கண்டு, அவற்றைத் தீர்த்துவைப்பதன் மூலம், நிரந்தரமாக அதற்கு ஒரு தீர்வுகாண்பதே பொருத்தமானது என்ற அணுகுமுறை பொதுவாக வரவேற்கத்தக்கதே.

அவ்வாறன்றி, அடிப்படைப் பிரச்சினைகளைக் கிடப்பில் போட்டுவிட்டு, மேலெழுந்தவாரியாக அதனை அணுகி, தற்காலிகத் தீர்வுகளைக்காண்பது நீண்டகால நோக்கில் எவ்வளவு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு உலகில் பல உதாரணங்களுள்ளன.

பாலஸ்தீனச் சிக்கலை இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக எடுத்துக்காட்டலாம்.

இஸ்ரேலின் நில ஆக்கிரமிப்பு, ஜெருசலேம் நகர் தொடர்பான சிக்கல், பாலஸ்தீனர்களுடைய சுயநிர்ணய உரிமை போன்ற அடிப்படையான பிரச்சினைகளைப் பின்தள்ளிவிட்டு, இஸ்ரேலுடன் பாலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் செய்துகொண்ட ஒப்பந்தங்களும், அங்கே அவர் அமைக்க முயன்ற அதிகாரமற்ற இடைக் கால நிர்வாகசபையும் கடைசியில் அமைதி முயற்சிகளைத் தோல்வியுறச் செய்தமை நாம் கண்கூடாகக் கண்ட அண்மைய வரலாறு.

இந்தத் தீர்வு முயற்சிகளுக்கும் அனுசரணை வழங்கியது, இலங்கைப் பிரச்சினையில் அனுசரணை வழங்கும் நோர்வே நாடுதான் என்பது, மேலதிகமாக நாம் கவனிக்கவேண்டிய ஒரு முக்கிய தகவல்.

நோர்வேயின் அனுசரணையுடன், இரகசியமாக அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் கைச்சாத்திடப்பட்ட ஒஸ்லோ ஒப்பந்தம் தோல்வி கண்டு, இறுதியாக இன்று அமெரிக்காவின் நேரடியான தலையீட்டுடன் வீதிவரைபடம் (**Road Map**) என்ற பெயரில் புதிதாக ஒரு அமைதி முயற்சி பலத்த இழுபறிகளுடன் அங்கே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்தகைய சர்வதேச உதாரணங்களில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடியாகத்தான், கதிர்காமர் தனது இந்தக் கருத்துக்களைக் கூறியிருப்பார் என்று நாம் ஊகிக்க இடமுண்டு.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில், பிரச்சினைக்கான அடிப்படைகளை இனங்கண்டு, ஒரு நிரந்தர அரசியற்தீர்வு குறித்துப் பரிசீலிக்க வேண்டியதன் அவசியத்தை இப்போது நாம் வலியுறுத்துவது, சர்வதேச அனுபவங்களின் அடியாகப் பொருத்தமானது என்றே கருதவேண்டியுள்ளது.

அப்படி ஒரு நிரந்தரத்தீர்வு என்று வரும் போது, தற்போது எதிரும் புதிருமாக நிற்கும் இலங்கையின் இரண்டு பிரதான அரசியல் சக்திகளான - ஐக்கிய தேசிய முன்னணியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் அந்த விடயத்தில் ஒற்றுமையாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வரக்கூடிய ஏதுக்கள் உண்டா என்பது பற்றி, கதிர்காமர் எதுவும் கூறத் தவறிவிட்டார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு எதிர் காலத்தில் ஒரு தீர்வு எட்டப்பட வேண்டுமானால், அது இந்த இரு பிரதான கட்சிகளிடையேயான ஒரு இணக்கப்பாட்டுடனே சாத்தியமாகும் என்பது, இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவரும் ஒரு விடயம்.

இதன் அடிப்படையில் - இலங்கையின் இரு பிரதான இனங்களிடையேயான முரண்பாடு ஆழமாகத் தோன்றியமைக்கான காரணிகள் குறித்தும், அது ஒரு சிவில் யுத்தமாக வளர்வதற்குக் காரணமாக அமைந்த சூழ்நிலைகள் குறித்தும், அண்மைக்காலமாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்பட்டன.

இவற்றுள் முதலாவதாகக் குறிப்பிடப்படும் பிரச்சினை, இரு இனங்களையும் பிரிப்பதற்குக் காரணமாக அமைந்த மொழிச்சிக்கல்.

அடுத்தது, இந்தப்பிளவை ஆழப்படுத்திய 1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரம்.

இவை இரண்டும் குறித்து இப்போது கொழும்பு சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் பிரதானமாக விவாதிக்கப்பட்டு வருவது ஒரு ஆரோக்கியமான அரசியல் மாற்றமே.

எனவே, இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு நிரந்தர அரசியல் தீர்வுகுறித்துப் பரிசீலிக்கமுடியும்.

முதலாவதாக, மொழிப்பிரச்சினையை எடுத்துக்கொண்டால் - அரசகரும மொழியாகச் சிங்களத்தை மட்டுமே பிரகடனப்படுத்திய 1956 ஆம் ஆண்டு அரசியல் செயற்பாட்டின் விளைவுகளுக்கு இப்போது தீர்வு காணப்படவேண்டியது அவசியமாகிறது.

1987 இல் இந்தியத் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம், தமிழையும் அரசகரும மொழியாக ஏற்றுக்கொண்டுள்ள போதும், நடைமுறையில் இது இன்னமும் பெருமளவுக்குச் சாத்தியமாகிவிடவில்லை.

இதை அரசகரும மொழியாக்க அமைச்சே அண்மையில் நடாத்திய கருத்தரங்கொன்றில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறது.

இன்று அரச அலுவலகம் ஒன்றுக்குச் சென்று, தமிழர் ஒருவர் ஒரு காரியத்தை முடிக்கவேண்டுமானால், அங்கு தமிழ்மொழி தெரிந்த உத்தியோகத்தர்கள் மிக மிக அரிதாகவே உள்ளனர்.

அப்படியே யாரும் அகப்பட்டுவிட்டாலும், தேவையான படிவங்கள் தமிழில் கிடைப்பது அரிது.

சாதாரணமாக, வடக்கு - கிழக்குக்கு வெளியே ஒரு தபாலை, தமிழில் முகவரியிட்டு அனுப்பிவைத்தால், அது உரியவருக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையே இன்னமும் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுவிடவில்லை.

60,000 பேரைக்கொண்ட இலங்கைப் பொலிஸ் படையில்- வெறும் 600 பேரே தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்களாக இருக்கின்றனர். இவர்கள்தான் இன்று வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் தமிழ்மக்களைப் பாதுகாப்பதாகக்கூறி அங்கே முகாம்கள் அமைத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவமோ, நூறு வீதம் சிங்களவர்களைக் கொண்டது. இங்கு தமிழுக்கே இடமில்லை.

எனவே, தமிழ்மக்களை பெரும்பான்மையாகக் கொண்டுள்ள வடக்கு-கிழக்கில் இன்று பிரதானமான பிரச்சினையாகக் காட்டப்படும் பாதுகாப்பு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அங்கு நிறுத்தப்பட்டுள்ளவர்களுக்கு, அங்கு வாழும் மக்களின்மொழி கிஞ்சித்தும் தெரியாது. தற்போது இந்தப் படைகளிலும், அரச அலுவலங்களிலும் பணியாற்றும் சிங்களவர்களுக்குத் தமிழ் கற்பித்து, தமிழையும் ஒரு அரசகரும மொழியாக நடைமுறையில் கொண்டுவர இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கலாம்.

அரச உத்தியோகங்களில் தமிழர்களுக்கும் உரியஇடம் வழங்கவேண்டும் என்ற விதிமுறையும் கடைப்பிடிக்கப்பட்டால், இந்தப் படையினர் வடக்கு-கிழக்கில் நிலைகொண்டிருக்கவேண்டிய தேவையில்லை.

இந்த மாற்றங்கள் நிகழ வாய்ப்பு உண்டா?

இலங்கையின் இனச்சிக்கலுக்குப் பிரதான காரணமாக அமைந்த இந்த மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவே, எத்தனை காலம் பிடிக்கும்.

இனப்பிரச்சினையாக வடிவமெடுத்துள்ள இலங்கையின் அரசியல் சிக்கலுக்கு ஒரு நிரந்தரத்தீர்வு காண்பதானால், அது இதைவிட அதிககாலம் பிடிக்கப்போகும் ஒரு விடயமாகத்தானே இருக்கமுடியும்?

இந்த நிலையில் - இனச்சிக்கலை, இனமோதலாக மாற்றிய 1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரம் குறித்து விசாரணைகள் நடாத்திய



ஜனாதிபதி ஆணைக்குழு, கலவரம் நடந்து 20 ஆவது ஆண்டு நிறைவில், தனது அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

அதில், இந்தக் கலவரத்துக்குப் பின்னணியாக இருந்தது அப்போதைய அரசாங்கமே எனறு பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

இந்தக் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வட்டியுடன் வழங்கப்படுவதுடன், அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக்கோரவேண்டும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய கருத்துக்களையே இலங்கையில் இயங்கும் நூற்றுக்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களும் ஒரு நீண்ட அறிக்கைமூலம் வெளியிட்டிருப்பதுடன், அவை துண்டுப்பிரசுரங்களாகவும் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

இவை தற்போது கொழும்பு அரசியலில் ஏற்பட்டிருக்கும் வரவேற்கத்தக்க பண்பு மாற்றங்களாகக் கொள்ளமுடியுமா?

சர்வதேச அளவில் இவ்வாறு போர்க்காலத்தில் இழைக்கப்பட்ட பல அநீதிகளுக்காக, பகிரங்க மன்னிப்புக் கோரப்பட்டமைக்கான பல உதாரணங்கள் உள்ளன.

ஆனாலும், இந்த ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது போலவோ, அரசசார்பற்ற நிறுவனங்கள் வெளியிட்ட கருத்துக்களுக்கு அமைவாகவோ, பாதிக்கப்பட்ட தமிழர்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோருவதற்கு அரசாங்கத்தைச் சேர்ந்த யாரும் இதுவரையில் சம்மதம் தெரிவித்ததாகத் தெரியவில்லை (இனப்பிரச்சினைத்தீர்வு விவகாரத்தில் முக்கிய பங்காற்றிவரும் ஒரு அரசியல்வாதி, இதற்கு மறுப்புத் தெரிவித்ததாகவும் ஒரு தகவல் உண்டு).

இது பிரதான அரசியல்வாதிகளிடையே ஏற்படவேண்டிய ஒரு முக்கிய பண்புமாற்றத்தை வேண்டி நிற்கிறது எனலாம்.

அத்தகைய ஒரு பண்பு மாற்றத்துக்கும் இன்னும் காலம் பிடிக்கும்.

ஆகவே, இலங்கை இனச்சிக்கலுக்குப் பிரதான காரணமாக அமைந்த இந்த இரண்டு விடயங்களுக்கும் தீர்வுகாண்பதே நீண்டகாலம் பிடிக்கப்போகின்ற காரியமாக உள்ளது.

இதுகுறித்தும் கதிர்காமர் ஏதாவது தீர்வை முன்வைப்பாராக இருந்தால், இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தை முன்வைத்த, அவரது முனையை முக்கிய கூற்று - நடைமுறைச் சாத்தியமான ஒன்றாகவும், மிகவும் பயனுடையதாகவும் இருக்கும்.

**அதியமான்**

# ‘லொக்கபீ’ விபத்தில் பலியானோருக்கு நஷ்டஈடு வழங்க லிபியா இணங்கியது!

(ஸ்கொட்லாண்ட்)

1988 ஆம் ஆண்டு, ‘லொக்கபீ’யில் இடம்பெற்ற விமானக் குண்டு வெடிப்பில் உயிரிழந்த 270 பயணிகளின் நஷ்டஈட்டுத் தொகையான 2.7 மில்லியன் டொலர்களை, அவர்களின் குடும்பத்தவர்களுக்கு வழங்குதற்கு லிபியா இணங்கியுள்ளது.

லண்டனில் நடைபெற்ற சமரசப் பேச்சுக்களின் பின், இந்த முடிவு எடுக்கப்பட்டது.

2001 ஆண்டு இடம்பெற்ற இந்த விமானக்குண்டுவெடிப்புக்கு, லிபியாவின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ‘அப்டெல் பாசெற் அலி மொகமட்’ என்பவர் பொறுப்பாக இருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இக்குண்டுவெடிப்பில் மரணமடைந்தவர்களின் உறவினர்களுக்கான ஒன்றுகூடல் ஒன்று கடந்த வெள்ளியன்று அமெரிக்கா இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

உயிரிழந்த ஒவ்வொருவரின் சார்பாகவும் 10 மில்லியன் டொலர் சுவிஸ் வங்கியில் வைப்பிலிடப்படவுள்ளது.

1999 ஆம் ஆண்டு முதல் லிபியாவிற்கு எதிரான பொருளாதாரத் தடையை ஐக்கிய நாடுகள் சபை விதித்திருந்தது. அத்தடையை நீக்குவது தொடர்பாக, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை கடிதம் மூலம் தெரிவிக்கவுள்ளது.



சிலி நாட்டின் லாமோண்டிய என்னும் இடத்தில், வேலைநிறுத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, அவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் தண்ணீரை விசிறியடிப்பதையும் பொலிஸாரை நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசுவதையும் படத்தில் காணலாம்.

உலகவலம்

## பாகிஸ்தான் - கராச்சி துறைமுகத்தில்

# தரைதட்டிய கப்பலில் எண்ணெய்க் கசிவு!



பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்தில், 6000 தொன் ‘மசகு’ எண்ணெயுடன் தரைதட்டியுள்ள கப்பல் ஒன்று உடைந்து போகும் ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கப்பலில் உள்ள வெடிப்புகளூடாக எண்ணை கசிந்து கடல்நீருடன் கலந்துவருகிறது.

இதனால், சூழல் பாதுகாப்பிற்கு பெரும் ஆபத்து ஏற்படக்கூடும் என அஞ்சப்படுகின்றது. இக்கப்பலை மீட்கும்பணி கைவிடப்பட்டுள்ளது.

எண்ணெய்க் கசிவு காரணமாக, கப்பலைச் சூழ்ந்துள்ள கடற்பிரதேசம் கருமை நிறமாக மாறியுள்ளது. பாகிஸ்தான் கடற்படையினர் அவ்விடத்தை தொடர்ந்து அவதானித்த வண்ணம் உள்ளார்கள்.

கடலின் மேல் படிந்திருக்கும் எண்ணெய்ப் படிவினால், நூற்றுக்கு மேற்பட்ட மீன்களும், ஆமைகளும் கடற்கரையில் இறந்து காணப்படுகின்றன.

இதேவேளை - சிங்கப்பூரிலிருந்து வந்த விமானம் மூலம், கப்பலிலிருக்கும் எண்ணெய் வெளியேற்றப்பட்டுவருகிறது. கப்பலில் தீ விபத்து ஏற்படாமல் தடுப்பதற்கு, பிரிட்டனிலிருந்து கப்பல் ஒன்று, சம்பவ இடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# உணவின்றித் தவிக்கும் லைபீரியர்கள் உணவுக் களஞ்சியங்களில் கொள்ளை!

(மொன்ரோவியா)

லைபீரியாவில், உணவின்றித் தவிக்கும் மக்கள் - துறைமுகத்தில் உள்ள உணவுக் களஞ்சியங்களை கொள்ளையிட முயல்வதாகவும், போராளிக் குழுக்கள் - வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், பொல்லுகளால் தாக்கியும் கொள்ளைகளை தடுக்க முயல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், உணவுப் பொருட்கள் கொள்ளையிடப்படுவதை முற்றாகத் தடுக்க முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - தீவிரவாதக் குழுக்கள் துறைமுகப் பகுதியிலிருந்து வெளியேறுவதற்கு முன்வந்தால், தமது படையினர் 200 பேர் சமாதானச் செயற்பாடுக்ளுக்காக மொன்ரோவியாவிற்குச் செல்வதற்கு தயாராக உள்ளனர் என்று, அமெரிக்க அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

போரினால் பாதிப்படைந்துள்ள மொன்ரோவிய மக்களுக்கு - மனிதாபிமான உதவிகளைச் செய்வது, ஆபிரிக்க சமாதானப் படையினருக்கு உதவுவது என்பன அமெரிக்கப் படையினரின் பணிகளாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தீவிரவாதக்குழுக்கள் - தமது இருப்பிடத்திலிருந்து நகர்வதற்கு முன், துறைமுகத்தில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உணவுக் களஞ்சியங்களைச் சூறையாடுவதில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.



ஆரம்பத்தில் - பாதுகாப்புப் பணிகளை மேற்கு ஆபிரிக்க நாடுகளே மேற்கொள்ளும் என, அமெரிக்கா தெரிவித்திருந்தது.

தற்போது 800 நைஜீரியப் பாதுகாப்புப் படையினர் லைபீரியாவில் கடமையாற்றுகிறார்கள். ஐ.நா. சபை அதிகாரிகள் நைஜீரிய அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து, தற்போது அமைதிப் பணியில் ஈடுபடும் படையினர், தேவையேற்படும்போது - போரிடவும் தயாராகவுள்ளதாக ஐ.நா.சபை அறிவித்துள்ளது.

# ‘ஜிகாத்’ தலைவர் மஹ்முட் சிடர் இஸ்ரேலியத் தாக்குதலில் பலி?

(காஸா)

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிலுள்ள பலஸ்தீனத்தின் மேற்குக்கரையிலுள்ள வெஸ்ட்பாங்கில், இஸ்ரேல் படைகளுக்கும், பலஸ்தீனப் போராளிகளுக்குமிடையில் நடைபெற்ற துப்பாக்கிச் சமரில், இஸ்லாமிய ஜிகாத் இயக்கத் தலைவரான ‘மஹ்மூட் சிடர்’ கொல்லப்பட்டதாக, ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழனன்று, நபுலாசில் கட்டடம் ஒன்றிலிருந்து, கிரனேட் ஒன்றை இஸ்ரேலிய படைகளை நோக்கி வீச முற்பட்டபோது, டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் மூலம் அந்தக் கட்டடத்தை இஸ்ரேலியப் படையினர் தகர்த்ததாகவும், பின்னர் - புல்டோசர்கள் மூலம் கட்டடம் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனிய தற்கொலைக் குண்டுதாரி ஒருவரின் வீடொன்று இஸ்ரேலியப் படையினரால் தகர்த்தழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



கியூபத் தலைவர் பிடல் கஸ்ரோ - ‘கவானா’ என்னும் இடத்தில், வைத்தியக் கல்லூரி மாணவி ஒருவருக்கு பட்டப்படிப்புச் சான்றிதழை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# பஸ்ராவில் குண்டுத் தாக்குதல்; பிரிட்டிஷ் படைச் சிப்பாய் பலி!

(பஸ்ரா)

ஈராக்கின் தென்பகுதி நகரான பஸ்ராவில், நேற்று நடத்தப்பட்ட வீதியோரக் குண்டுத் தாக்குதலில், பிரிட்டிஷ் படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் காயமடைந்தனர் என பிரிட்டிஷ் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் படையினரின் அம்புலன்ஸ் வண்டியை இலக்குவைத்தே, இக்குண்டுத் தாக்குதல் நேற்றுக் காலை பஸ்ரா நகரின் மத்தியிலுள்ள வீதியொன்றில் நடத்தப்பட்டது.

மின் கம்பம் ஒன்றுக்கருகில் மறைத்துவைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாக பிரிட்டிஷ் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

தாக்குதலுக்குள்ளான அம்புலன்ஸ் வண்டி - பிரிட்டிஷ் படையினருக்கும் ஈராக்கிய பொதுமக்களுக்கும் மருத்துவசேவையை வழங்கிவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.



## செப்ரெம்பர் 11 தாக்குதல் சந்தேக நபரான

# அல்கொய்டா உறுப்பினர் மீது ஜேர்மனியில் விசாரணை!



அமெரிக்காவில் நடைபெற்ற செப்ரெம்பர் 11 குண்டுத் தாக்குதலின் பங்குகொண்ட ‘அல்கெய்டா’ அமைப்பைச் சேர்ந்த மோரோக்கோவில் பிறந்த ‘அப்டெல் கனி மௌகுடீ’ என்பவருக்கு எதிரான விசாரணை ஜேர்மனியில் நேற்று ஆரம்பமானது.

3000 மக்களின் மரணத்திற்குக் காரணமாக இருந்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில், சென்ற ஒக்ரோபர் மாதம் ஜேர்மனியின் ‘ஹம்பேர்’ என்னுமிடத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

செப்ரெம்பர் 11 குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட ‘மொஹமட் அட்டா’ என்ற விமானத்தைக் கடத்தியவருடன் நட்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டும் இவர் மேல் சுமத்தப்பட்டுள்ளது.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## பரீட்சைப் பெறுபேற்றைப் பார்வையிடுவதற்கு சென்ற

# மாணவனைக் காணவில்லை உறவினர்கள் முறைப்பாடு!

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றைப் பார்வையிடுவதற்காக, சண்டிலிப்பாயிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த மாணவனைக் காணவில்லையென - நேற்றையதினம் உறவினர்களால் யாழ். மனிதஉரிமை ஆணைக குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவு வெளியாகிய பின், யாழ். இந்துக் கல்லூரி மாணவனான குணரெட்ணம் ஜெயப்பிரகாஷ் (வயது 20) என்பவர், தனது பரீட்சைப் பெறுபேற்றைப் பார்வையிடுவதற்காக மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளார்.

ஆனால், அந்த மாணவன் இதுவரை வீடு திரும்பவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெற்ற

# மாணவர்களின் விபரப்பட்டியல் தயாராகிறது!

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு

சென்ற வருடம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்தியடைந்த மாணவர்களில்- பல் கலைக்கழக அனுமதிபெற்றுள்ள மாணவர்களின் இறுதிப் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டுவருவதாக, கல்வித் திணைக்களம் அறிவித்துள் ளது. இவர்களுக்கான பரீட்சை முடி வுகள் சென்ற சனிக்கிழமை வெளி யானதைத் தொடர்ந்தே இந்த அறி வித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடத்தைவிட, இவ்வருடம் ஆயிரம் மாணவர்கள் அதிகமாகப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுகிறார்களென, பல்கலைக்கழக அனுமதிக்கான செயற்பாட்டுக்குழுவின் தலைவர் கலாநிதி ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார். யாழ். பல்கலைக்கழகமும், மொறட்டுவ பல்கலைக்கழகமும டிசம்பர் மாதத்தில் மாணவர்களை ஏற்றுக்கொள்ளுமென்றும், ஏனையவை ஜனவரி மாதத்தில் மாணவர்களை ஏற்றுக் கொள்ளுமென்றும் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

வைத்தியத்துறை -905, பல் வைத்தியத்துறை - 75, மிருக வைத்தியத்துறை - 75, விவசாயத்துறை- 740, பொறியியற்துறை - 780, இரசாயனத்துறை - 1500, நிர்வாகத் துறை - 2200, வர்த்தகத்துறை - 555, கலைத்துறை - 4160, சட்டத் துறை- 200, விஞ்ஞானத்துறை-850

### மன்னாரில் போதைப்பொருள் தடுப்பு இயக்கம்

மன்னார் பகுதியில் - போதைப் பொருளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், போதைப் பொருள் எதிர்ப்பு இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

பள்ளிமுனை லூசியா தேவாலய பங்குத் தந்தை அருட்திரு ஜே.வி. தேவராஜா தலைமையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### தேர்தல் ஏற்பாடுகளில் ஜே.வி.பி.

மாகாண சபைகளுக்கு தேர்தல் நடக்கும் பட்சத்தில், அதில் போட்டியிடுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துவருவதாக, ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

தேர்தலில் போட்டியிடுபவர்களை தெரிவுசெய்வது சம்பந்தமான நடவடிக்கைகளும், கட்சிக்கு புதிய உறுப்பினர்களை சேர்த்துக்கொள்வதிலும் - ஜே.வி.பி. ஈடுபட்டுவருவதாக, அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## எழுதுமட்டுவாள் பிரதேசத்தில்

# கண்மூடித்தனமாகச் சுட்ட இராணுவச் சிப்பாய் கைது

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாள் பகுதியில் இராணுவ காவலரணிலிருந்த இராணுவ வீரர் ஒருவரின் தவறான நடவடிக்கையை, அவரது அதிகாரி கண்டித்ததை அடுத்து, திடீரென கண்மூடித்தனமாக அங்குமிங்கும் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பியோட முயன்றபோது, இராணுவத்தினர் அவரைக் கைது செய்துள்ளனர்.

அதிர்ஷ்டவசமாக இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் யாரும் காயமடையவில்லை என்றும், மேற்படி சிப்பாய் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும், இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

## கோப்பாயில் விபத்துக்குள்ளான

# மினிபஸ்ஸின் சாரதிக்கு பிணையில் செல்ல அனுமதி

கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட மினிபஸ் சாரதியான சதாசிவம் சிவகுமாரன் (வயது 55), யாழ். நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்தபோது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பத்தாயிரம் ரூபா காசுப் பிணையிலும், பதினைந்தாயிரம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்ட இவர், எதிர்வரும் 28 ஆம் திகதி நீதிமன்றில ஆஜராகும்படி, நீதிவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விபத்தில், ஆவரங்காலைச் சேர்ந்த வேலாயுதம் மோகன் (வயது 31) என்பவர் படுகாயமுற்ற நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனளிக்காத நிலையில், நேற்று முன்தினம் மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் மின்னல் தாக்கி புகைப்படக் கலையகம் சேதம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள புகைப்படக் கலையகம் ஒன்று, மின்னல் தாக்கிச் சேதமடைந்தது.

நேற்றுமுன்தினம் காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில், கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள 'நிமலன்ஸ்' புகைப்படக் கலையகமே சேதமடைந்தது.

கடைக்குள்ளிருந்த ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான புகைப்படப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்களும் சேதமடைந்தன.

கடைக்குள் பணியாட்கள் இருந்தபோதும், தெய்வாதீனமாக அவர்களுக்கு பாதிப்புக்கள் எதுவும் இடம்பெறவில்லை.

### மட்டக்களப்பில்...

நகருக்கு வந்து திரும்பிச்சென்று கொண்டிருந்தவேளையிலேயே, இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

துவிச்சக்கரவண்டியில் வந்த இருவர், மோட்டார் சைக்கிளுக்குக் குறுக்காக சைக்கிளை நிறுத்தி மோட்டார் சைக்கிளில் வந்த நபரை கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்தவரை நோக்கியும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட போதிலும், அவர் எதுவித காயமுமின்றி தப்பிக்கொண்டார் எனத் தெரியவருகிறது.

# அகதிமுகாம்களை மீளப் புனரமைக்கும் பணி அரசசார்பற்ற நிறுவனங்களிடம் ஒப்படைப்பு!

யாழ்.குடாநாட்டிலுள்ள அகதி முகாம்களை மீளப் புனரமைப்பது தொடர்பாக - சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடன் யாழ்.செயலக அதிகாரிகள், பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்றுக்காலை யாழ்.செயலகத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், குடாநாட்டிலுள்ள அகதிமுகாம்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், மழைகாலங்களில் அகதிகள் பெரும் அவலத்தை எதிர்நோக்கியுள்ளனர். ஆகையால், அரசசார்பற்ற நிறுவனங்களிடம் அகதி முகாம்களைப் புனரமைக்கும் பணியை, யாழ். செயலகம் நேற்றைய கூட்டத்தில் கையளித்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் அகதிமுகாம்களின் தேவையினை முதன்மைப்படுத்தி, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இக்கலந்துரையாடலில், திட்டப் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை, பிரதேச செயலாளர்கள், மற்றும் யூ.என்.எச்.சி.ஆர், ஜி.ரி.சற், பட்டினிக்கு எதிரான நிறுவனம் ஆகிய அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 500 பஸ்கள் இறக்குமதி

(கொழும்பு)

இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ், லங்கா அசோக் லேலண்ட் நிறுவனத்திடமிருந்து - ஒவ்வொன்றும் 22 லட்சம் பெறுமதியுள்ள 500 பஸ்களைத் இலங்கை இறக்குமதி செய்யவுள்ளது.

இதில் குளிரூட்டப்பட்ட சில பஸ்களும் அடங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் பெறுமதி 40 லட்சம் ரூபாவாகும்.

மேலும் 500 பஸ்களை அவ்வப்போது இலங்கைக்கு கொண்டு வரவும் ஏற்பாடாகியுள்ளது. இங்கு மாதம் 15 பஸ்கள் வீதம் கொண்டு வரப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கைத்தொழில் அமைச்சர் ரோகித போகொல்லாம, அசோக் லேடன்ட் நிறுவனத்துக்கு தற்போது இலங்கைக்கு கொண்டு வந்துள்ள பஸகளைப் பார்வையிட்டுள்ளார்.

### விசேட தூதுவர் சொல்ஹெய்ம்...

கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு கடந்த காலங்களில் நடந்து கொண்ட முறைபற்றி நோர்வேத் தூதுவரிடம் விளக்கினர்.

கடந்த காலங்களில் நடைபெற்ற இராணுவ அச்சுறுத்தல்கள், இராணுவக் கெடுபிடிகள் கண்காணிப்புக் குழு ஒருதலைப்பட்சமாக செயற்பட்டதாக குற்றம்சாட்டினார். குறிப்பாக மீராவோடை, தமிழ்கிராமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் மக்கள் மீளக்குடியமர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, கண்காணிப்புக்குழுவினர் இராணுவத்தினருக்குச் சார்பாகவே நடந்துகொண்டனர் எனக் குற்றம்சாட்டினார்.

தொடர்ந்து காத்தான்குடியில் முஸ்லிம் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது, தமிழ், முஸ்லிம் மக்களிடையே கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக கேட்டறிந்தார்.

மாலை 1.30 மணியளவில் கரடியனாறில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் தேனகம் அலுவலகத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தார். ஸ

இச்சந்திப்பின்போது, மட்டு-அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஷ் மற்றும் விடுதலைப் புலிகளின் கல்விப்பிரிவைச் சேர்ந்த வரதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் யுத்த நிறுத்த மீறல்கள், சோதனைக் கெடுபிடிகள் தொடர்பாகவும், தமிழ், முஸ்லிம் மக்களிடையே உள்ள பிரச்சினைகள் பற்றியும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

### புலிகளின்...

இறுதிக்குள் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கக்கூடிய நிலை ஏற்படும் எனத்தாம் நம்புவதாகவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - எதிர்வரும் 20 ஆம் திகதி புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பாரிஸுக்கு புறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மீண்டும்....

இதேவேளை -

இலங்கை இராணுவத்திற்கு மேலதிகமாக 4000 படையினரைத் திரட்டுவதற்கு ஏதுவாக, அதற்குத் தேவையான ஆகக்குறைந்த கல்வித்தரத்தை 8 ஆம் தரமாக இறக்கியுள்ளதாக அறிவித்துள்ளார் சந்திரிகா.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரம்பர் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இராணுவத்திற்கான நாடுதழுவிய ஆட்சேர்ப்பில், வழமையைப்போல் புதிய படையினரைச் சேர்ப்பதிலுள்ள இழுபறி நிலையைப் போக்குவதற்காகவே சந்திரிகா இந்த கல்வித்தரத்திற்கான எல்லையை இறக்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# மாகாணசபை தேர்தலில் தனித்தே போட்டியிடும்!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடுத்துவரும் மாகாணசபைத் தேர்தலில் தனித்தே போட்டியிடும் என, அதன் அரசியற்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரால் உரிய முறையில் செயற்படுத்தப்படாமையே, இந்த அறிவிப்புக்குக் காரணம் எனத் தெரிவித்தனர்.

புதிய மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் புதிய ஒப்பந்தமொன்றையும் செய்ய - முஸ்லிம் காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.

புதிய ஒப்பந்தத்தில் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கில் விடயங்கள் அமைந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### மூதூரில் ஊரடங்குச் சட்டம்

திருகோணமலை மூதூர் பகுதியில் நேற்றுமாலை ஆறு மணியிலிருந்து இன்று காலை ஆறுமணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் திருமலை மாவட்ட நிர்வாக உறுப்பினர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதன் பின்னரே இந்த ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## பொத்துவில் பிரதேசத்தில்

# மூவாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் முஸ்லிம்கள் பயிர்செய்ய இணக்கம்

(அம்பாறை)

பொத்துவில் பிரதேசத்தில் யுத்தம் காரணமாக பயிர்செய்கை மேற்கொள்ளப்படாமல் இருக்கும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 9000 ஏக்கர் காணியில், சுமார் 3000 ஏக்கரில் பயிற்செய்கை மேற்கொள்ள இணக்கம் காணப்பட்டதுடன், நிலமை சீராகும்போது எஞ்சி இருக்கின்ற 6000 ஏக்கர்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

நேற்று அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினை சம்பந்தமாக ஆராயும் மாவட்டமட்டக் கூட்டத்தில் இந்த இணக்கங்கள் காணப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பதில் தலைவர் ஒகஸ்ரா தலைமையில் - நேற்றுக் காலை 10 மணி முதல் சுமார் 2 மணித்தியாலங்கள் ஆலையடி வேம்புப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் - விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையில் மூன்றுபேரும், முஸ்லிம்களின் சார்பில் எம்.ஐ.எம்.மொகைதீன் தலைமையில் ஐந்துபேரும் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.